# திராவிடநாடு


## பரிகாரம் செய்யாவிடில்!

[ சுரதா ]

★

காடுகள் கொன்று நாடாக்கிப்—பல
கட்டிடம் மாளிகை கட்டிக் கொடுத்தோம்;
மாடு இழுத்திடும் ஏரால்—வயல்
மண்ணைத் திருத்திநல் தானியம் தந்தோம்;
ஆடும் தறி அதனாலே—மக்கள்
ஆசைப்படும் துணி மேடைகள் தந்தோம்;
ஓடு எடுத்தலை கின்றோம்!—காது
ஓலையைப்போல மனம் சுருள்கின்றோம்!

கட்டி மலையைப் பிளந்தோம்—பூமி
கர்ப்பத்தில் உள்ள பசும்பொன் எடுத்தோம்;
வெட்டியதால் உருவான—குளம்
வீதிகள், பாதைகள், உண்டாக்கி வைத்தோம்;
சுட்டும் விழிநிறங் காட்டும்—கடல்
சுற்றித் திரிந்திடக் கப்பல்கள் செய்தோம்
கொட்டும் மழை நீரைப்போலே—கண்ணீர்
கொட்டுகின் றோம்பசித் துன்பத்தினாலே

இரவின்பனி, பகல் வெய்யில்—புயல்
இடிமழை நோய்கள் தருந்துயரோடு,
தெருவினில் கையேந்து கின்றோம்—இந்தக்
தேசத்தில் பட்டினிப் பூச்சியா கின்றோம்!
மரங்களைப் போல்நனை கின்றோம்—வீதி
மண்ணில் படுத்திரு கைபோர்த்து கின்றோம்.
பரிதாப மன்றோ இக்காட்சி—பரி
காரம் செயாவிடில் இதுஎன்ன ஆட்சி?


2
அணா



# அகலிகையும்—ஆச்சாரியாரும்!

**தம்பி,**

பாவி, பொல்லாதவன், படுக்கையைத் தட்டிப் போடு என்று, பயத்தால் ஒரு பாவையை, பாதகனொருவனின் காமப் பசிக்குப் பலியாக்கிடும் பாட்டியின் சேட்டைக்கு ஒப்பிட்டேன், ஆச்சாரியாரின் 'தட்சிண ராஜ்ய' திட்டத்தை; மானத்தையும் மாண்பையும் மதித்திடும் இனத்தினரும் வகையினரும், இந்தப் 'பாட்டி'போல நடந்துகொள்ளவும்மாட்டார்கள், நாட்டுப்பற்றே எல்லாவற்றினும் மேலானது என்று எண்ணிடும் எவரும், ஆச்சாரியார் தருவதுபோன்ற திட்டத்தைத் தரமாட்டார்கள், எது எப்படியாயினும், என் சபதம் நிறைவேறவேண்டும, என் நோக்கம் ஈடேறவேண்டும் என்று எண்ணிடும் போக்கினர், தமக்கென ஒரு உயர்ந்த இலட்சியத்தினைக்கொண்டிராதவர்கள் போக்கிலே, ஆச்சாரியார் செல்வது கண்டு நான் உள்ளபடியே வருந்துகிறேன். பெரியார் பலமுறை இவரைப் பாராட்டிப் பேசுவதை—பொதுக் கூட்டங்களில் மட்டுமல்ல, தனியாக உரையாடும்போதும்—கேட்டுக் கேட்டு எனக்கு ஆச்சாரியாரிடமிருந்து, நாடு அதிகம் எதிர்பார்க்கலாம், முயற்சித்தால் அந்த முதியவராலே பல பெரிய காரியங்களைச் சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதுண்டு. கூர்ந்து பார்ப்பதனால் ஒரு உண்மை எனக்குப் புலப்படுகிறது. தம்பி! கருடன், மிக மிக உயரமாகப் பறப்பதைப் பார்க்கிறாயல்லவா? அழகாகக்கூட இருக்கும் பார்ப்பதற்கு. கழுத்து மட்டும் தூய வெள்ளைநிறம்கொண்டகோலத்தில் உள்ள கருடன், மேலே எழும்பி வட்டமிடுகிறது, எதற்கு என்று எண்ணுகிறாய்? உலகம் எப்படி இருக்கிறது என்று அழகு காணவா? ஊரார் எப்படி இருக்கிறார்கள், அவர்களுக்கு ஏதேனும் குறைவந்துளதோ என்று கண்டறியவா? இல்லை, இல்லை! இரை தேடுகிறது. அதற்காகவே அவ்வளவு உயரத்தில் பறக்கிறது. அதற்குத் தேவையான 'இரை' அங்கே கிடையாது. கீழேதான் இருக்கிறது—ஆனால் அதைப் பெற, கருடன் மேலே வட்டமிட்டுப் பார்க்கிறது. கருடனுடைய கூரிய கண்ணுக்கு, அவ்வளவு உயரத்தில் இருந்து பார்க்கும்போதும், கீழே உள்ள பொருள் பளிச்சென்று தெரியுமாம். அவ்வளவு கூரிய பார்வை—கண்டறியும் திறன். ஆனால், இவ்வளவு உயரம் மேலே பறந்து, இவ்வளவு திறமையாக, கூரிய பார்வைகொண்டு, கருடன் கண்டெடுக்கும் இரை என்ன தெரியுமா, தம்பி, செத்துப்போன எலி, சாக இருக்கும் தவளை, இப்படி. இதற்கா இவ்வளவு உயரம் பறந்து இலாவகமாக வட்டமிட்டு, கூரிய கண்களால் கண்டறியவேண்டும். செத்த எலிக்கும் தவளைக்கும், இத்தனை உயரம் பறந்திடும் கருடன் போல, ஆச்சாரியார் உயர உயரச் செல்கிறார், மந்திரியிலிருந்து கவர்னர், அதிலிருந்து வைசிராய் என்று இப்படி உயரப் பறக்கிறார், கடைசியில் ஏதாவதொரு செத்த எலி, சாக இருக்கும் தவளை கிடைக்கிறது! பரிதாபமாகத்தானே இருக்கிறது.

ஆச்சாரியார் தமது உயர்ந்த நிலையையும், திறமையையும் தக்க முறையில் பயன்படுத்தினால், நிச்சயமாக, தாயகத்தைத் தருக்கரிடமிருந்து மீட்டிடும் காரியத்தை காந்தியார் காலத்திலேயே துவக்கி இருந்திருப்பார். அங்ஙனம் அவர் செய்யாததற்குக் காரணம், எனக்குத் தெரிந்த அளவில், இரண்டு. ஒன்று, அவருக்கு எதைச் செய்தால் வேறு எது கெட்டுவிடுமோ என்ற அச்சம். சுருட்டுக்காக நெருப்பைத் தேடினால், நெருப்பு பட்டு மீசை போய்விடுமோ என்று பயந்தான் என்று ஏமாளிபற்றிய கதை கூறுவார்களல்லவா, அதுபோல, அவருக்கு, தாயகத்தை வடநாட்டாரிடமிருந்து மீட்டிடும் காரியத்தில் ஈடுபட்டால், இங்கே ஆரியத்துக்கு ஆபத்து எளிதாக உண்டாக்கிவிடுவார்களோ என்று அச்சம் கிளம்பிவிடுகிறது. ஆரியத்தைக் காப்பாற்றவேண்டுமானால், நாட்டு விடுதலை எனும் நல்ல இலட்சியத்தைத் தலைமுழுகிவிடத்தான் வேண்டும் என்று துணிந்துவிடுகிறார். மற்றொன்று, அவருக்குக் கூரிய மதி இருக்கிறது, மறுப்பார் இல்லை. ஆனால், மிகமிகக் காலங் கடந்தே அது பயன்படுத்தப்படுகிறது. வேடிக்கைக் கதை ஒன்று சொல்லுவார்கள்; தீராத தலைவலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான் ஒரு மன்னன்; இதைத் தீர்த்துவைப்பவர்களுக்கு பதினாயிரம் வராகன் பரிசு என்று முரசறைவித்தான். ஆண்டு ஒன்று ஆயிற்று—மருத்துவனோ, மகானோ யாரும் வரவில்லை—தலைவலி அதிகமாகிவிட்டது. இந்தப் பொல்லாத தலைவலியைப் போக்கிடும் மூலிகையோ, தைலமோ தருபவனுக்கு என் இராஜ்யத்தில் பாதி பகிர்ந்தளிக்கிறேன் என்று பறைசாற்றச் சொன்னான்—பலன் ஏற்படவில்லை. இராஜ்யத்தில் பாதி மட்டுமல்ல, என் மூத்த பெண்ணையும் கலியாணம் செய்து தருகிறேன், மூலிகை தரும் மருத்துவனுக்கு என்று

(14-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 8-1-56 [இதழ் 27

# என்று வருமோ!!

—

புத்தாண்டு மலர்ந்தது! புது நாடு ஒன்றும் அரும்பிற்று!!

ஆளும் கட்சித் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமாகச் சேர்ந்து புதிய கொடியினை ஏற்றினர். இத்தனை நாளும், தமது நாட்டைப் பரிபாலனம் செய்துவந்த பச்சைக் கொடியை எகிப்துப் பிரதிநிதியிடமும், 'யூனியன் ஜாக்' கொடியை பிரிட்டிஷ் பிரதிநிதியிடமும் அளித்தனர்.

ஆண்டுகள் பலவாக, ஆங்கிலேயப் பிடியில் கட்டுண்டு கிடந்த சூடானையும் எகிப்தையும் சேர்த்து ஒரு நாடு என்றே கணக்கிட்டுப் பேசுவர்—அரசியல் வாதிகள். அதுபோல, இரண்டும் ஒன்ருகவே இணைந்து நின்று வாழும்—ஏனெனில் இருப்போர் எல்லாம் ஒரே மதத்தவர்கள்-எப்படிப் பிரிய மனம் வரும்? என்று எண்ணத் தான் செய்வர். இரு நாட்டிலும் வாழ்வோர், ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், எங்கள் வீட்டுக்கும் ஒரு எல்லை வேண்டும்! அதற்குள் நீ, எட்டிநுழையாமலிருக்கும் உரிமையும் வேண்டும் என்று கேட்டு, சூடான், புது நாடாகிவிட்டது.

"இதைப்பற்றி, வாக்கெடுப்பு எடுத்து முடிவுசெய்யலாம்.எகிப்துடன் சேர்ந்து வாழ்வதுதானே, ஐக்கியத்துக்கு அழகு! இருநாடுகளையும் வளப்படுத்தும் நைல்நதி, இருவருக்கும் சொந்தமாகத்தானே இருக்கிறது. மதமும் ஒன்று! கலாச்சாரமும் ஒன்று! இப்படிப்பட்ட நாம் பிரியலாமோ? மக்கள் மனம் எப்படி இருக்கிறது என்று தேர்தல் வைத்து முடிவெடுப்போம்" என்பதாக எகிப்து சர்க்கார் கூறிற்று. எகிப்தும், அண்மையில் அரசன் நகீபை விரட்டிவிட்டு குடியரசாக மலர்ந்த நாடுதான்! ஆயினும், அருகிருக்கும் சூடானையும் இணைத்து வாழ்ந்தால், பெரியதொரு நாடாகயிருக்குமே எகிப்து என எண்ணினர்—ஆட்சி நடத்தும் நாசர் குழுவினர். அவரும், நேருவும் நெருங்கிய நண்பர்கள் என்பதுதான் உங்கட்குத் தெரியுமே!

இந்தக் கொள்கையை ஆதரிக்க சூடானுக்குள்ளும் ஒரு அரசியல் கட்சி இருந்தது—ஆனால், சூடானின் தெற்கே வாழும் நீக்ரோ மக்கள் இந்த இணைப்புக் கொள்கையை எதிர்த்துக் கிளர்ச்சிகள் துவக்கினர். தனி நாடு வேண்டும், என்றனர்—அதன் விளைவாக, திடீரென கடந்த டிசம்பர் 19ந் தேதி, ஆளும் சபையில் சூடான் பிரதமர் அலி அஜாரி, ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினர், சூடான், சுதந்திர நாடாகிவிடும் என்று சொல்லி! எதிர்க்கட்சியும், மறுப்புரைக்கவில்லை— ஏற்றுக்கொண்டது. அதன் அறிகுறியாகவே, ஆளும் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து நின்று தமது புதிய கொடியை ஏற்றி மகிழ்ந்திருக்கின்றன!

சூடான் அரசு செய்த இந்த முடிவை, எகிப்து ஏற்குமோ! சூடானுக்கு தர்மதாதாவாக விளங்க விரும்பும் பிரிட்டன் ஏற்றுக்கொள்ளுமோ!-என்று பலர் ஐயம்கொண்டனர். அப்படியின்றி, உடனே இரு அரசுகளும் அரும்பும் புது நாட்டை ஏற்றுக் கொண்டுவிட்டன. அமெரிக்காமுதல், இந்தியாவரை, எல்லோரும் 'சூடான் வாழ்க!' என்று வாழ்த்தியும்விட்டனர்

கடந்த ஆண்டு, சூடான், பிறருக்குக் கட்டுப்பட்ட நாடு; இன்று அது சுதந்திர நாடு.

அதன் விடுதலைக் காட்சி, திராவிட நாடு கேட்கும் நமக்கு, மென்மேலும் ஊக்கமளிக்கிறது. கலாச்சாரம், மதம் இவைகளைக் காட்டி, எவ்வளவுதான் ஐக்கிய ஆலாபனம் செய்தாலும், தமக்கென்றோர் நாடு வேண்டும் — அது தன்னிச்சையாக வாழவேண்டும் என்று எண்ணிவிட்டால், அதை அன்பு காட்டியோ அல்லது அச்சமூட்டியோ தடுத்தி-முடியாது என்று தெரிவிக்கிறது, இந்தச் செய்தி. குடும்பங்களிலேயே அண்ணன் தம்பிகளுக்குள், தனியாக வாழும் ஆசை எழும்போது, நாடுகளுக்குள் எப்படிச் சாத்யமாகும், ஐக்கியம்?

அரும்பிய சூடான், குடியரசாக மலர்ந்து, பிற நாடுகளைப்போல மணம் வீசும் என்று எதிர்பார்க்கிறோம். புது ஆண்டு, சூடான் மக்களுக்கு, புது ஆனந்தம் அளித்திருக்கிறது. அத்தகைய அகமகிழ்ச்சியை நமக்குத் தரும் புத்தாண்டு என்று வருமோ!!

# ★ ஏமாந்த நாடு ★

"எங்க நாடு! எங்கும் வளம்
பொங்கும் நாடு—வந்த
எல்லார்க்கும் இடம் கொடுத்து
ஏமாந்த நாடு!!"

என்று, 'ஓர் இரவு' திரைப்படத்திலே ஒரு பாடலைக் கேட்டிருக்கக் கூடும். பாடலைத் தீட்டியவர், தமிழரசுக்கழகத்திலிருப்பதாகச் சொல்லப்படும் தோழர் டி. கே. சண்முகம்! பிரிவினை விரும்பும் நாமல்ல!!

வந்த எல்லார்க்கும் இடம் கொடுத்து, ஏமாந்த நாடு — என்பதை, தென்னாட்டின் வரலாற்றை அறியும் எவ்ரும் உணராமலில்லை, எந்தக் கூடாரத்திலிருந்தாலும், ஏதாவதொரு சமயத்தில் இந்த எண்ணம் புகுந்து குடையாமலிருப்பதில்லை. வளம் பொங்கும் நாடு; ஆனால், வந்தார்க்கெல்லாம் இடம் கொடுத்து ஏமாந்தது. ஏன்? தமிழர் தம் வள்ளல் தன்மையைக் கண்ட கயவர்கள், சதிக்கும் சூதுக்கும் இலக்காக்கினர் நம்மை; வஞ்சகமும், மித்ரபேதமும் அறியாத நமது மண்ணை, எளிதில் வளைத்துப் போட்டனர். மொழியின், குரல் வளைக்குக் கத்திவைத்தனர்—நாவினிக்கப் பேசி, நயவஞ்சகத்துக்கு இரையாக்கினர்,

புலி உருவில் வந்தாலும், புள்ளிமான் தோற்றத்தில் வந்தாலும், மதங்களானாலும், மார்க்கபோதகர்களானாலும், அரசியல் கருத்துக்களானாலும், அவைகளைப் போதிக்கும் தலைவர்களானாலும், தென்னாடு, ஏற்க மறுத்ததே கிடையாது! எதையும், வரவேற்கும் — கூடிய வரையில் ஏற்று ஆதரித்து, பாதுகாக்கவும் முயற்சிக்கும்.

"சரிதம் சொல்லும்சம்பவங்களைப் பாருங்கள். வடக்கில் பிறந்தவைகளானாலும், தெற்கில் தான் அடைக்கலம் புகுந்துள்ளன. ராமகிருஷ்ணமடமும், கௌடியா மடமும் ஏற்பட்டு இங்கு வளர்க்கப்படுவதைப் பாருங்கள். வடக்கிலிருந்து வந்த அகஸ்தியனுக்கு இடம் அளித்திருக்கிறோம், அந்தக் காலத்திலேயே! தீப்பொறியென வர்ணிக்கப்பட்ட தேசபக்தர் அரவிந்தர் அடைக்கலம் புக இங்குதான் வந்தார்; புதுச்சேரியில், ஆசிரமம் அமைத்து, 'தவ'க்கோலம் பூண்டதாக அறிவித்தார். இதுமட்டுமா? இன்னும் இதோ, சான்றுகள், பாரீர்" என்று விடுதலை விரும்பிகளாகிய நாம் வெளியிடுவதில் ஆச்சரியமில்லை-"மெயில்" ஏடு-வெள்ளையர்தம் பிடியிலிருந்து அனந்தராம

கிருஷ்ணய்யரின் சொற்படி ஆடுகிற ஆங்கில இதழ், தெரிவிக்க முன் வருகிறது.

விந்தியத்துக்குத் தெற்கே, கபீர்தாசும், துளசிதாசும், மீராபாயும், சாயிபாபாவும் அடைந்திருக்கிற செல்வாக்கை யாராவது மறுக்கமுடியுமா?

வால்மீகி இராமாயணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தென்னிந்திய மொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கவில்லையா?

துளசிதாஸ் இராமாயணத்தையும், மொழிபெயர்த்திருக்கிறோமே.

என்று தெரிவிக்கிறது, மெயில். "ஆகா, இதுவன்றோ நமது பெருந்தன்மை! ஈடுண்டோ இக்குணத்துக்கு" என்று தட்டிக் கொடுத்துத் தன்னுடைய காரியத்தைப் பார்த்துக்கொண்டுபோக எண்ணவில்லை, 'மெயில்'. மேலும் கீழும் என்ற தலைப்பிட்டு, 'N. J. R.' எனும் பெயர்கொண்டார், தினசரி தீட்டி வருகிறார்—சிந்தனையூட்டும் பல சம்பவங்களைத் தொகுத்து. அவர் "வடக்கிலிருந்து வந்த எதைத்தான் நாம் ஆதரிக்காமலிருக்கிறோம்?" என்பதுகுறித்து விளக்கியதோடில்லாது, அடுத்தபடியாகக் கேள்வி ஒன்று போடுகிறார். மெயிலில் வருகிறது அந்தக் கேள்வி—மெயில், தி. மு. க. ஏடல்ல.

"கம்பராமாயணம், குறள் ஆகிய நூல்களுக்கு இந்தி குஜராத்தி, வங்காளம் போன்ற மொழிகளில் ஏதாவது ஒரு மொழிபெயர்ப்புண்டோ?"

ஏதாவது ஒரு மொழி பெயர்ப்பு இருக்கிறதா எனக்கேட்கிறார். விந்தியத்துக்குத் தெற்கே வடக்கிலுள்ள எதையும் எல்லா மொழிகளிலும், பலவிதமாக மொழிபெயர்த்துவைத்துள்ளோம். ஆனால், தமிழிலுள்ள ஒரு நூலாவது, வடநாட்டு மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கிறதோ? கிடையாது. ஏன்? எனக் கேட்கிறார், என். ஜே. ஆர். அவைகள்மட்டும் அருகதையற்றவைகளா—இலக்கியச் சுவை இல்லாதவைகளா? ஏன் மொழிபெயர்க்கப்படவில்லை—என்று கேட்கிறார்.

இந்த நூல்களை, 'வெளிநாட்டு' மொழிகளில்கூட மொழிபெயர்த்திருக்கிறார்கள். இன்னும் பல முயற்சிகள் நடந்துகொண்டுள்ளன—அகண்ட பாரதத்தில்மட்டும் ஏன் இல்லை? —என்று கேட்கிறார்.

இருந்தும், நாம் இன்னும் பழைய பெருந்தன்மையை இழக்கவில்லை என்பதையன்றோ, சென்னையில் சீரும் சிறப்புடன் வங்க இலக்கிய மாநாடு நடக்கும் காட்சி காட்டுகிறது! என்றும் கேட்கிறார் கட்டுரையாளர்.

மேற்படி வங்க மாநாட்டைத் துவக்கிவைத்த சென்னைக் கவர்னர், மிகமிக வியந்தாராம், "அடடா! இந்தத் தமிழர்களுக்குத்தான் என்ன நல்ல மனம். எதையும், அன்போடு உபசரிக்கும் பண்புதான் எவ்வளவு இருக்கிறது," என்பதாக. "ஆமாம், கவர்னரே! அந்தப் பண்பு இல்லையானால், உம்முடைய குடும்பம் ஆண்டாண்டு காலம், சென்னை மண்ணில் வாழ்ந்துவர முடியுமா? உங்கள் முப்பாட்டனார் கோபால்தாஸ், சென்னையில் கிழக்கிந்திய கம்பெனி ஏற்பட்ட காலத்திலேயே இங்கு வந்து இருந்தாராமே! உங்களுடைய தந்தை பகவன்தாஸுக்குக்கூட சென்னை எவ்வளவோ, மரியாதை செய்திருக்கிறதே!," என்று நாமல்ல; 'மெயில்' கேட்கிறது அதில் தொனிக்கும் கேலி, சாதாரணமானதா என்ன!! தமிழர்களின் உபசரிக்கும் குணம், எல்லாரையும்தான் வரவேற்றது — சகல மொழிகளையும் தான் ஏற்றது—மதபோதகர்களையும் தான் ஏற்றுக்கொண்டது—ஆனால், யார் தமிழர்களின் மொழியை, பண்பை, பாராட்டினார்கள்? எவருமில்லையே என்கிறார், மெயிலார்.

வங்கத்து மைந்தர்களாம் தாகூரைத் தெரியும் நமக்கு — பங்கிம் சந்திரரின் கதைகள் உண்டு தமிழில். என்னென்ன நூல்கள் வங்க மொழியில் உண்டோ, அவை யாவும் தமிழாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதுபோல, வங்கத்திலாகட்டும், வடநாட்டின் எந்தப்பாகத்தில்தானாகட்டும் பாரதியாரின் கவிதைகளோ, 'கல்கி'யின் கதைகளோ மொழி பெயர்க்கப்பட்டதுண்டா?- கேட்கிறார், அவர்; நாமல்ல!

கிடையாது! இல்லை!! — என்கிறது, மெயில்.

"சோழர் தம் சிறப்பில் தமிழகம் வாழ்ந்தபோது, விந்தியத்தைத் தாண்டி, "நாம்" செல்லும் பாதைகளிருந்ததுண்டு. அது நின்றது. பிறகு, தொடரவேயில்லை."—

*

"இப்படியெல்லாம், நிலைமைகளிருக்கும்போது, இந்தியை எதிர்க்கும் தமிழர்களைக் குறைகூற முடியுமோ?"

*

இப்படிப்பட்ட சம்பவங்கள் யாவும் தமிழர் தம் மனதுக்குள் நிரம்பி, அவர்களுடைய கண்களைத் திறந்துவிட்டது."

*

"வந்தாரை வரவேற்பவன்தான் தமிழன். ஆனால் முன்பிருந்தது போலவே, இப்போதும் இருக்க இயலுமோ?"

*

"தொழில் துறையில் தெற்கு புறக்கணிக்கப்படுவதாக, தொழிலரசர்கள் முறையிடுகிறார்கள் அதுபோலவே, எழுத்துத் துறையிலும், இலக்கியத் துறையிலும் பேதாபேதம் காட்டப்படுவதாக, எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்."

*

இவ்வளவு 'காரசாரமாக'க் குறிப்பிட்டிருக்கும் கட்டுரையாளர் கடைசியில் முடிக்கிறார்—குடியரசுத் தலைவரும், கோலோச்சும நேருவும் தமிழைப் பேணுவோம்—பெருமைப்படுத்துவோம் என்று பேசலாம்—பேசிக்கொண்டே இருக்கலாம்! ஆனால், வாய்ப்பந்தல் பயன் தரவா முடியும்? செயலில் என்ன தென்படுகிறது, தெரியாமலா இருக்கிறது, நமக்கு எனும் பொருள் தொனிக்க.

செய்தியொன்று இதோ வருகிறது, ரூபாய் இருபது இலட்சம் செலவில், நாட்டின் நானுபகுதிகளிலும் 'காந்தி கர்' கட்டப்படப்போகிறதாம். பெயரைப் பார்த்தீர்களா—காந்தி கர்! இந்தியில் 'கர்' என்றால் 'வீடு' எனப் பெயர். அந்தப் பணத்தில், அதிராம்பட்டினத்தில் கட்டினாலும், ஆலத்தம்பாடியில் அமைத்தாலும், அதனை யாவரும் 'காந்தி கர்' என்றுதான் அழைக்கவேண்டும். சிறு விஷயம் — ஆனால், மிகவும் கூர்த்த மதியுடன் வடவர்கள் வேலை செய்து வருகிறார்கள் என்பதைக் காட்டுவது இது — இந்தி பலப்பல உருவங்களில் படையெடுத்து வருகிறது, நம்மீது.

கார்டு, கவர், ஸ்டாம்புகளில் இந்தி; அதுமட்டுமல்ல, ஸ்டாம்புகளில்கூட வடநாட்டுக் கவிவாணர்கள் உருவம். ஏன், தென்னாட்டுக் கவிஞர்களில் யாருக்கும் இடமில்லை? என்று, கேட்டு வருகிறார்கள், பலர்—பல நாட்களாக. பயன், பெரிய பூஜ்யம்.

அதனையே, நாம், ஆண்டு பலவாக எடுத்துக் காட்டி வருகிறோம்—எனினும், ஏற்க மறுப்போர் இருக்கிறார்கள்—அவர்களுக்கு, "மெயிலின்" விளக்கங்களைக் காட்டுகிறோம். இந்தளவுக்கு, உண்மையுணர்ச்சிகளை, ஒளித்துமறைக்காது தீட்டிய, கட்டுரையாளரையும் பாராட்டுகிறோம். ★

தொடர் சித்திரம்

# அறுவடை

4

அரங்கண்ணல்

**தேசிய** அசெம்பிளி காத்திருக்கிறது, என்று அறிவிக்கப்பட்டதும் விடால் பரபரப்படைந்தான். ஜெஸ்டை, அலட்சியமாகப் பார்த்துவிட்டு, சபைக்குள் சென்றான். விடாலை, ஜெஸ்டு பார்த்த பார்வை, "மண்புழு நீ! உன்னை என்ன செய்கிறேன், பார்" என்று சொல்லுவது போல இருந்தது.

சபை கூடியிருந்தது—நாட்டைப் பரிபாலிக்கும் மக்களின் பிரதிநிதிகள் எல்லாம், அமர்ந்திருந்தார்கள். பார்வையாளர்களுக்கென அமைக்கப்பட்டிருந்த தனியிடத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். 'சபாநாயகர்', கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். உள்ளே சென்ற விடால், இராணுவ முறையில் எல்லோருக்கும் மரியாதை செய்தான். கம்பீரமான குரலில், ஹாலந்தில் பிரெஞ்சுப் படைகள் எவ்வளவு வீரத்துடன் போராடுகிறார்கள்—விரோதிகளைச் சாய்க்க, அவர்கள் காட்டும் தீரம்— மலர்ந்திருக்கும் மக்களாட்சிக்காகத் தமது உயிரையும் திரணமென மதித்துப் போரிடும் அவர்தம் மாட்சி—ஆகிய செய்திகளை விவரித்துச் சொன்னான். அதைக் கேட்கக் கேட்க ஒவ்வொருவரும் மகிழ்ந்தனர்! "நாம் வெற்றி பெற இன்னும் கொஞ்சம் வீரர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களை சேர்த்துக் கொண்டு செல்ல சபையின் அனுமதியை எதிர்பார்க்கிறேன். அவசியம் நீங்கள் தரவேண்டும்........," என்று தெரிவித்துவிட்டு, "பிரதிநிதிகளே! இதுவரையில் தாய்நாட்டின் மானத்தைக் காப்பாற்றும் வீரர்களின் மன உறுதியையும், மாற்றாரைக் கொன்று குவிக்கும் வீரத்தையும் பற்றி எடுத்துச் சொன்னேன். ஆனால், சோர்வில்லா மனதுடன் நாங்கள் அங்கே போராடும்போது இங்கே சுகமனுபவிக்கும் கும்பலும் வளர்வதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்! ஒரு கண்டிராக்டர்-ராணுவத்துக்கான காலணிகளைத் தயார் செய்து அனுப்பும் குத்தகைக்காரர் — செய்திருக்கும் அக்கிரமத்தைக் கேளுங்கள்....."

ஜெஸ்டு எழுந்தான்—அவன் எழுந்ததுமே எல்லா உறுப்பினர்களும் அவன் என்ன சொல்லப்போகிறானோ என்பதிலேயே சிந்தையைச் செலுத்தினர். ஏனெனில் அவன்தான் ஒரு பெரிய பிரசங்கியாயிற்றே!! ஜெஸ்ட் பேசினான், "சபைத் தலைவர் அவர்களே! இந்தப் போர்வீரன் வந்த விஷயத்தை விட்டு வேறு ஏதோ ஒரு விஷயத்துக்குத் தாவுகிறார். போர்க்களத்துக்கு வீரர்கள் தேவை—சரி, சபை அதை அனுமதிக்கிறது. இனி. போகலாம்...எவ்வளவோ அரசியல் பிரச்சினைகளைக் கவனிக்கவேண்டிய நாம் காலத்தை வீணாக்க முடியாது."

"ஆமாம்! ஆமாம்!" என்றார் சபாநாயகர்.

"தலைவர் அவர்களே!......," என்றான் விடால்.

"உட்கார்! ஜெஸ்டு பேசும்போது பேசாதே......," என்றனர் சில உறுப்பினர்கள்.

"என்னைப் போகச்சொல்லு முன். என் தலைவர் சொன்ன இந்த ஒரே ஒரு வேண்டுகோளை......"

தலைவர் மேஜையைத் தட்டினார்—விடால் உட்காரவில்லை.

"தலைவர் தீர்ப்பையும் மதிக்கத் தெரியாத இந்தத் தகாதவனை.....", ஜெஸ்டு முடிக்கவில்லை, வார்த்தையை.

சபாநாயகர், 'அப்புறப்படுத்துங்கள் இந்த வீரனை!', என்று தீர்ப்பு அளித்தார். சபைக்கு வெளியில் தயாராக நின்றுகொண்டிருந்த பாதுகாவலர்கள் வந்து, விடாலைப் பிடித்தனர்.

"அக்கிரமம்! அநீதி! தலைவர் அவர்களே...என் வார்த்தையைக் கேட்டுவிட்டு பிறகு என்னை இழுத்துச் செல்லுங்கள்," என அலறினான் விடால். அவர்களோ, சபையின் கௌரவமே பாதிக்கப்படுவதாகக் கருதினர். விடாலால், இந்த அநீதியைச் சகிக்க முடியவில்லை. வெகுண்டான். அலறினான், சபையில் ஒரே குழப்பமும் கூச்சலும் உண்டாயிற்று.

விடாலின் விருப்பத்தை கேட்காமல் அவனை விரட்டுவது சரியல்ல — என்று சபையில் ஒருசாரார் எண்ணாமல் இல்லை. ஆனால் அவர்கள் பெரும்பான்மையினரல்ல — ஜெஸ்டைப் போன்ற வாய்வீச்சுக்காரர்களுமல்ல- உண்மையான காரியவாதிகள். இவர்கள் இதயம் கொதித்தது இந்த அக்கிரமத்தைக் கண்டு! அவனுக்குச் சிறிது நேரம் அனுமதிப்பதால் பிரளயமா வந்துவிடும்? தாய்நாட்டைக் காக்கப் போரிடும் வீரன்தானே அவனும்! அவனைப் போன்றவர்களில்லாவிடில், வெற்றி பெற்றிருக்க முடியுமா நம்மால்?-என்று எண்ணியவர்கள், "விடால் கூறுவதை சபை கேட்க வேண்டும். அவசியம் கேட்கவேண்டும்," என்பதாகக் கூச்சல் போட்டனர்.

ஆனால் ஜெஸ்டு, ஒரே வார்த்தையில் மறுத்தான், "சபைத் தலைவர் தீர்ப்பு அளித்துவிட்டார். அதை நிறைவேற்றி சபையின் கவுரவத்தைக் காப்பாற்றுவதே நாம் செய்யவேண்டிய காரியம். அதைவிட்டு இப்படி அமளிகளுக்கு ஆதரவளிப்போமானால், சபையின் கௌரவம் என்ன ஆவது? மக்கள் சபையின் கவுரவத்தையா மாசுபடுத்துகிறீர்கள்!"

இதைக்கேட்ட சபாநாயகர், மணி அடித்து "ஆர்டர்! ஆர்டர்!!", என்று கூவினார்.

சீறும் சிம்மம் போல நின்ற விடாலைப் பிடித்திழுத்து வெளியே கொண்டுவிட இரு காவலர்கள் நெருங்கினர்.

"போகிறேன்! மக்களின் பெயரால் மண்டைக் கர்வம் பிடித்தலைவர்களே, போகிறேன்! ஆனால், இன்று நடைபெற்ற அக்கிரமத்தை பாரிஸ் பட்டணத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சொல்லிவிட்டே போகிறேன். மக்களின் பிரதிநிதிகளாகிய நீங்கள் என் குரலைக்கேட்க மறுத்தீர்கள். ஆனால், நான் சொல்வதைக் கேட்கவேண்டிய மக்கள் அதோ இருக்கிறார்கள்! அவர்களிடம் சொல்லிவிட்டுப் போகிறேன்," என்று முழக்கமிட்டுவிட்டு,

சபையைவிட்டு வெளியேறினான் விடால்.

வெளியில் வந்தும் அவனுடைய வீராவேசம் தணிந்தபாடில்லை. அங்கே கூடியிருந்த மக்களிடமே, தன்னுடைய முதல் பேச்சைத் துவக்கக் கருதினான். அந்த நேரத்தில், வெள்ளுடையணிந்த ஓர் உருவம் அவன் தோளைத் தட்டியது — யாரென்று, அவன் திரும்பவே, "பேசாமல், வா!" என்று ஒருபக்கமாக அழைத்துசென்றது. அவரைத் திரும்பிப் பார்த்ததும், விடால் அவருடன் பேசாமல் சென்றான். ஏனெனில் அந்த ஆளைப் பற்றி அவனுக்குத் தெரியும். டாண்டன் என்பது அவரது பெயர்! ஜெஸ்டைப் போல சட்ட சபையில் அவரும் ஒரு உறுப்பினர். சுயநலமற்றவர். நற்பண்புகள் நிறைந்த உண்மையான தேச பக்தர். "விடால்! அவசரப்படாதே. உன் உள்ளத்திலே ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்புகளை அறிவேன் நான். அதனால்தான் அவசரப்பட வேண்டாமெனச் சொல்லுகிறேன்".

"அந்த ஜெஸ்டு, என்னிடம் என்ன சொன்னான் தெரியுமா? லஞ்சப் பேய், என்னை மிரட்டினான்! மக்களின் வரிப் பணத்தை விரயமாக்கும் கொள்ளைக்காரனின் சகா அவன்!!"

"ஜெஸ்டைப்பற்றி உன்னைவிட நன்றாகத் தெரியும் எனக்கு அதனால் தான், இந்த ஆலோசனையைக் கூறுகிறேன்".

"அவன் என்னை என்ன செய்து விட முடியும்?"

"எதுவும் செய்ய முடியும்! வேண்டுமானால், காலை மலர்வதற்குள் உன்னைப் பிணமாக்கவும் முடியும்..."

"அப்படிச் செய்தால், சட்டம் அவனைச் சும்மா விட்டுவிடாது......"

"சட்டம்! அந்தச் சட்டத்தையே மாற்ற முடியுமப்பா அவனால். அவ்வளவு சக்தி வாய்ந்தவன்! உன்னைத் தெரியும் எனக்கு—உன்னுடைய தேச பக்தியையும் நன்றாக அறிவேன் நான் பெரிய வீரன், நீ! உயிரையே திரணமென மதித்து, உன் தாய் நாட்டுக்காகப் போராடுகிறாய். எல்லாஞ்சரி, ஆனால் உன்னையே தேசத் துரோகி என்று சொல்லி தூக்குமேடையில் கொண்டுபோய் நிறுத்த முடியும், அவனால். அதனால்தான் எச்சரிக்கிறேன்! அவனுடைய புரட்டுகளை அம்பலமாக்கும் வேலையை, என்னிடம் விட்டுவிடு தியாகிகள் போர்வையில் அகப்பட்டதைச் சுருட்டும் இந்த அரசியல்வாதிகளை அம்பலப்படுத்த நான் இருக்கிறேன். ஆகவே, இந்த இடத்தை விட்டு இப்போதே கிளம்பு! பாரிஸ் பட்டணத்தைவிட்டு, இப்போதே பறப்பட்டுப்போய்விடு. நகர எல்லையை நீ கடக்க வேண்டுமென்றால், காவலாளிகள் அரசாங்க உத்தரவு இருக்கிறதா என்று கேட்பார்கள். அரசாங்கத்தின் சார்பில், என்னைப்போன்ற சட்டசபை மெம்பர்கள் கையெழுத்திட்டு அனுமதிச் சீட்டு அளித்தாலும். செல்லும். உனக்கும் உன் மனைவிக்குமாக இதோ, அனுமதிச் சீட்டை எழுதித் தயாராய் வைத்திருக்கிறேன். இந்தா! இப்போதே போ—இந்த நகரைவிட்டுக் கிளம்பிவிடு" என்று தெரிவித்தார், பரபரப்புடன்.

விடாலுக்கு, இந்த யோசனையை ஏற்க விருப்பமில்லை. "அநீதியை அழிக்கஉயிர்போனால் என்ன! தியாகங்களுக்கிடையே நிறுவப்பட்ட குடியரசு, சுயநலமிகளிடம் சிக்கிச் சிதைவதா? இதை எதிர்த்து வீழ்த்துவதை விட என்போன்றாருக்குள்ள கடமை பிறிதென்ன இருக்க முடியும்.........?" என்றான்.

"உண்மை வீரனே! ஆனால், காய், கனியாகுமுன் தின்பதால் பலன் என்ன? பல்தான் கூசும்! நெல், பழுக்குமுன் அறுவடை செய்வதால், யாருக்கு நன்மை? காலம் கனியும் கசடர்களுக்குப் புத்தி புகட்ட! அதுவரையில் காத்திருக்க வேண்டியதுதான். அதுமட்டுமல்ல, உன் மனைவியை நினைத்துப்பார். உன்னுடைய அவசர ஆர்வத்துக்காக, அவள், விதவையாகவேண்டுமா?"

அங்கெல்!—அவளைப்பற்றி நினைத்ததுமே, விடாலின் முகம் மாறியது. டாண்டன், கடைசியில் சொன்ன வார்த்தை அவனைக் கலக்கிவிட்டது அங்கெல், விதவைக் கோலத்துடன் அவன் கண்முன் நிற்பதுபோலத் தெரிந்தது. அந்தக் காட்சியை மனக் கண்ணால் காணவும் சகிக்க முடியவில்லை, அவனால். "சரி!" என்று டாண்டனிடம் ஒப்புதலளித்துவிட்டு வீட்டை நோக்கிக் கிளம்பினான்

## 4

அன்று பகல் பூராவும் அந்த அறையில் அடைபட்டுக் கிடந்த சிராக் பிரபு, எண்ணாததெல்லாம். எண்ணிக் கொண்டு கிடந்தான். அறைக்கே அழகுசெய்வதுபோல அங்குமிங்கும் அங்கெல் நடந்து செல்லும்போதெல்லாம், அவனுடைய மனமும் அவளுடனேயே போய்க்கொண்டிருந்தது. விடால் வேறு அங்கில்லையா! அதனால் அவன் உள்ளத்தில் அடங்கிக்கிடந்த மோகபோதை, கோர உருவெடுக்கலாயிற்று. அவளுடைய ஒவ்வொரு அசைவிலும், அழகு நர்த்தனமாடுவதாக எண்ணினான். என்னுடையவளாக இருக்கவேண்டியவளல்லவா இவள்! என்று எண்ண எண்ண மாபெரும் விரோதிபோல மனக்கண் முன்பு தென்பட்டான்விடால். அவனை ஒழித்துவிட்டு அந்த ஒய்யாரியுடன் வாழும சந்தர்ப்பம் நேர்ந்தால்......! 'பழைய சுபாவம்' மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தது அப்பிரபுவுக்கு.

அங்கெல், அங்கிருந்த சோபா ஒன்றில் வந்து உட்கார்ந்தாள். அவளுடைய கணவன் கொண்டுவந்த பெட்டியை சோதனையிட்டாள் அதில் கிடந்த ஒரு மேல் சட்டை கொஞ்சம் கிழிந்திருந்தது. அதை எடுத்துத் தைக்க ஆம்பித்தாள். அந்தக் காட்சியைக் கண்ட சிராக் பிரபு எண்ணலானான், "வெண்புரு பறப்பதுபோலிருக்கிறது வேலைசெய்யும் அவளுடைய விரலசைவைப் பார்க்கும்போது! இந்த அதிரூபசுந்தரி என்னுடைய மடியிலே கிடக்கவேண்டியவளன்றோ! இப்போது, கேவலம் ஒரு போர் வீரனின் மனைவி!! குதிரைகள் பூட்டிய 'கோச்' சிலே பவனி வரவேண்டியவள்,அந்தக் 'கோச்'சிலே பூட்டப்படும் குதிரையை மணந்துகொண்டு இருக்கிறாளே! உண்மையாகவே, இவள் எப்படி அவனுடன் இன்பமாக வாழ்க்கை நடத்த முடியும்? என்னைவிட அழகன் கூட அல்ல அவன்; முரடன்! முரடன் வசம், இந்த முல்லைக்கொடி எப்படி சுகமாக இருக்க முடியும்? ஒருக்காலும் முடியாது! அவ்வளவு மகிழ்ச்சியுடன் இருப்பவள் என்றால் என்னைக் காப்பாற்றுவதில் ஏனிவ்வளவு சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும்? ஒருவேளை! அவளுக்கு என்மீது..." என்று நினைத்தபோது, அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. என்னை, அவள் காப்பாற்றக் காரணம், 'அது'வாகத்தானிருக்க வேண்டும் என்கிறமுடிவுக்குவந்தான்.

"அங்கெல்!"

"என்ன?"

"சண்டை சண்டையென்று சதா உன்னைவிட்டுப் பிரிந்திருக்கும் விடாலுடன் வாழ்க்கை நடத்துவது சலிப்பாகத்தானே இருக்கிறது, அங்கெல்'

அவள், என்ன பதிலளிக்கிறாளோ என்று கூர்ந்து கவனித்தான். நிமிர்ந்தாள், அவள்.

"சலிப்பா? பிரபுவே! எவ்வளவு குதூகலமாயிருக்கிறேன் தெரியுமா. தாய் நாட்டுக்காக என் கணவர் படையில் சேர்ந்து பணியாற்றுவதை எண்ண எண்ண என் மனம் எவ்வளவு சந்தோஷமடைகிறது தெரியுமா?"

எதிர்பார்த்த பதில்அவளிடமிருந்து வராததைக் கண்ட சிராக் ஏமாற்றமடைந்தான். வேறு எதுவும் கேட்கவில்லை, அவன். வெறிக்க வெறிக்க அவளையே பார்த்தான். அங்கெல்,

அவனைச் சற்றும் கவனிக்கவில்லை. அவளுடைய வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாள். சிராக்கின் மனம், வெகு வேகமாக ஓடலாயிற்று. அப்படியே, அவளைக் கட்டித் தழுவினால் ...!—என்று எண்ணலானான். விடால் திரும்பி வருவதற்குள், ஒருதரம் அவளை...!—எனும், கொடூர எண்ணம் தலைதூக்கிற்று, மனதில் அப்படிச் செய்தால், பிரான்சிலிருந்து தப்பிச் செல்ல வழி கிடைக்காதே — என்று நினைத்தான். இப்படி, ஆசை ஒரு பக்கமும் அச்சம் இன்னொரு பக்கமும் அலைமோதும் உள்ளத்துடனிருந்த நேரத்தில் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. சோர்ந்த முகத்துடன் உள்ளே நுழைந்தான் விடால்.

அவனுடைய தோற்றத்தைக் கண்டதுமே, எதிர்பார்க்காத நிகழ்ச்சியேதோ நடந்திருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டாள், அங்கெல்.

"அன்பே போன விஷயம் என்ன வாயிற்று?"

"இந்தப் பாரிஸ் நகரை விட்டு, இரவோடு இரவாக நாமிருவரும் தப்பி ஓடவேண்டும், அங்கெல்."

"என்ன?"

"முட்டாள்தனமாக நடந்துவிட்டேன். அயோக்கியர்களைத் தியாக மூர்த்திகள் என்றெண்ணி மாபெரும் தவறு செய்துவிட்டேன்"

சஞ்சலத்தோடு, சோபாவில் சாய்ந்தான் விடால். அவன் கையிலிருக்கும் 'கவர்' ஒன்றைக் கண்ட அங்கெல் 'என்ன' வென்று கேட்டாள்.

"இதுவா! இந்தா, நீயே பார்..." என்று கவரிலிருந்த அனுமதிச் சீட்டை எடுத்து மேஜையின் மீது வைத்தவனாய், "பாரிஸிலிருந்து நானும் நீயும் செல்வதற்காக, நான் பெற்று வந்திருக்கும் அனுமதிச் சீட்டு அங்கெல். இங்கே தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும், உனக்கும் எனக்கும் ஆபத்துத்தான். உடனே மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு புறப்படத் தயார் செய். இரவு, எட்டு மணிக்கு குதிரை வண்டியொன்றை வரச் சொல்லியிருக்கிறேன். அதிலேறிக்கொண்டு நகர எல்லையைத் தாண்டிவிட வேண்டும்"

அறையின் ஒரு பக்கத்திலிருந்தவாறு இருவரின் உரையாடலையும் கவனித்துக்கொண்டிருந்த சிராக் பிரபு திடுக்கிட்டான். அவன் கண்கள், மேஜையின் மீது கிடந்த அனுமதிச் சீட்டின் மீது பாய்ந்தது. எப்படியாவது தப்பிச் செல்லலாம் என்று இருந்த தன்னுடைய நம்பிக்கையில் இடி விழுந்ததென்றே கருதலானான். அவனுடைய முகத்திலும் சோகத்தின் சாயல் பரவலாயிற்று.

"எந்த நாட்டுக்காக என் இரத்தத்தைச் சிந்துகிறேனே, இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைக்கிறேனே, அந்தத் தாய்நாட்டின் சுதந்திர சர்க்கார் என் போன்ற தூய்மையான தொண்டர்களுக்கு அளிக்கும் பரிசு, இது தான். அங்கெல்."

என்று, வேதனையுடன் முணுமுணுத்தான், விடால். கணவனது கவலை தோய்ந்த முகத்தைக் கண்ட அங்கெல், அவனுடைய தோளிலே சாய்ந்து கொண்டாள்.

"பயப்படாதே அங்கெல். நல்ல வேளையாக வரவிருந்த ஆபத்தை டாண்டன், எச்சரித்து இந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டார். இன்றில்லாவிடினும் ஒருநாள், இந்த அயோக்கியர்களுக்கு மக்கள் மன்றம் தக்கபாடம் கற்பிக்கும்," இப்படிச் சொல்லி வந்தவன், திடீரென நிறுத்தினான். ஏனெனில், கவலை தோய்ந்த முகத்துடன் நின்ற சிராக் பிரபு கவனத்துக்கு வரவே, அவன் பக்கம் திரும்பி, "தோழரே உம்மைக் காப்பாற்ற நினைத்தேன். ஆனால் என்னையே காப்பாற்றிக்கொள்ள வேண்டிய இக்கட்டிலிருக்கிறேன். தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம் — என்ன செய்வது? இப்போது படைக்கு யாரும் ஆள் சேர்க்கப்போவதில்லை. வேறு யாராவது வந்து செய்யக்கூடும். ஆதலால், உம்மைக் காப்பாற்றிக்கொள்ள நீரே, இனி, முயற்சி செய்துகொள்ள வேண்டியதுதான்," என்றான் விடால்.

சிராக், பெருமுச்சு விட்டுக் கொண்டே, "உங்கள் அன்புக்கு நன்றி!", என்று சொல்லிவிட்டு, மேற்றிசையில் அஸ்தமித்துக்கொண்டிருந்த ஆதவனைப் பார்த்தான். அவன், உயிரும், அஸ்தமனம் ஆக வேண்டியதுதான் என்று சொல்லுவது போலிருந்தது—அக்காட்சி.

விடாலும், அங்கெலும், புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யலாயினர். விடாலின் மனதில், "தன்னை நம்பிய ஒருவனைக் காப்பாற்ற முடியவில்லையே எனும் ஏக்கம் மோதிக் கொண்டேயிருந்தது. அதனால், சிராக்கைப் பார்த்து, "நண்பரே! நீங்கள் இரவு முழுமையும் இங்கேயே கழிக்கலாம். ஆனால், ஒன்று. எந்த நேரத்திலும் என்னைக் கைது செய்வதற்காக ஜெஸ்டின் ஆட்கள் இங்கே வரக் கூடும். எனக்குப் பதில், நீங்களிருப்பதைக் கண்டால், வந்தது வீண் போகவில்லையென்று உம்மைக் கைது செய்து கொண்டுபோகத் தவறமாட்டார்கள், அவர்கள். ஆகவே, முன்னெச்சரிக்கையுடன் இரும்", என்று கூறிவிட்டு, பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யலானான்.

வானவெளியினைப் பார்த்துக் கொண்டிருந்த சிராக்குக்கு வயிற்றெரிச்சல் அதிகமாயிற்று. விடாலையும், அங்கெலையும் பார்க்கப் பார்க்க, அவனுடைய உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த எரிமலை வெடிக்கலாயிற்று.

இந்த நேரத்தில் யாரோ, கீழே கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அங்கெல், அதைக் கேட்டதும் பயந்துவிட்டாள், "விடால்! ஒரு வேளை ஜெஸ்டு ஆட்களை அனுப்பிவிட்டானோ?" என்றாள்.

"இருக்காது, அங்கெல்!" என்று அவளைத் தேற்றியவாறு கதவைத் திறந்தான். வெளியே, நின்ற ஆள் விடாலிடம் சீலிடப்பட்ட ஒரு கவரை நீட்டினான். அதை வாங்கிக் கிழித்துப் படித்த விடால், கடிதம் கொண்டு வந்தஆளிடம், "சரி! நீ போ. உடனே நான் வருவதாகச் சொல்" என்று கூறிவிட்டு, அங்கெலிடம் விடைபெற்றுக்கொள்ள அறைக்கு வந்தான். அவளிடம், அந்தக் கடிதத்தை நீட்டினான். டாண்டன், எழுதியிருந்தார்:- "கடிதம் கண்டதும் உடனேவா, ஒரு முக்கியமான விஷயம். உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய விஷயம். உடனே வரவும்"

"அங்கெல்! இதோ போய்விட்டு வந்துவிடுகிறேன். நீ, தயாராயிரு, வந்ததும் கிளம்ப......"; என்று சொல்லிவிட்டு, விடால், விரைந்தான். ஏதும் புரியாதவளாய், திகைத்தபடி விடை கொடுத்தாள், அங்கெல்.

இப்போது அறையில் சிராக் புலியும், அங்கெல் புள்ளிமானும்தான்.

(தொடரும்)

## அனுகூல சத்துரு

ஒரு இடையர் தனது ஆட்டுப் பட்டியைக் காத்து வந்த நாயின்மேல் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தார், தான் வெளியே போகும்போது நாயைப் பரிபூரணமாக நம்பி ஆடுகளை விட்டு விட்டுச் செல்வார். ஆனால் நாயோ, இடையர் வெளியே போகும்வரைதான் சும்மா இருக்கும். அவர் போனபின்பு ஆட்டுக் குட்டிகளை அடித்துத் தின்பது அதன் வழக்கம், இந்த மாதிரியே நீண்டகாலம் நடத்திவந்தது நாயின்துரோகம் ஒருநாள் இடையனுக்குத் தெரிந்துவிட்டது. அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நாயைச் சுருக்கிட்டுக் கொல்ல கயிறு எடுத்து வந்தார். தனக்கு உயிர்பிச்சை அளிக்கும்படி நாய் மன்றாடியது. தன்னை விட ஓநாய்தான்அதிகம் சாப்பிட்டிருக்கிறதென்று சொன்னது. இதைக் கேட்ட இடையர் "ஓநாய் சாப்பிட்டது உண்மைதான். அது அதனுடைய குணம் ஆனால் உன் நிலை ஓநாயிடமிருந்து ஆடுகளைக் காப்பாற்றத் தான், உன்னை சோறு போட்டு வளர்க்கிறேன். ஆகவே உன்னுடையதுரோகம் ஓநாயின்அயோக்கியத் தனத்தைவிட பன்மடங்கு கேவலமானது நீ உயிரோடு இருக்க அருகதையில்லை என்று கூறி நாயைச் சுருக்கிட்டுக் கொன்றார்.

(சரஸ்வதி)

# என்ன செய்தீர்?

## இன இழிவு நீக்க!

### 'உழைப்பாளி' குமுறல்

[கடலூரிலிருந்து வெளிவரும் 'உழைப்பாளி' எனும் உழைப்பாளர் கட்சியின் குரலாக விளங்கும் ஏடு, கடந்த வாரம் வெளியிட்டிருக்கும் கட்டுரை இது.]

"சுமார் 25, 26 வருஷங்களுக்கு முன் வன்னியர்களை குற்றப் பரம்பரையினர் என்று உறுதி செய்வதற்காக ஒரு சட்டமியற்றப்பட்டது. ஆனால், உடனடியாக அச்சட்டமானது, நம் குல திலகமாகிய காலஞ்சென்ற பூண்டியாங்குப்பம் திரு. கே. ராமச்சந்திர படையாச்சியாரின் முயற்சியால் அப்போது முதலமைச்சராய் இருந்த பொப்பிலி ராஜா அவர்களால் ரத்து செய்யப்பட்டது என்று, 26–6–55ல் கடலூரில் நடைபெற்ற வன்னியர் இளைஞர் கழக மாநாட்டில் தலைமை வகித்த திரு. என். டி. கோவிந்தசாமி கச்சிராயர் M. P. அவர்களால் நமது நிதி மந்திரி திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் குற்றப் பரம்பரையினர் என்று வன்னியர்களிலே ஒரு பிரிவு இருப்பதாக எண்ணிப் பேசுவதற்கு விளக்கம் தரப்பட்டது.

அதற்கு முன்னும் பின்னும் பல பொதுக்கூட்டங்களிலும், மாநாடுகளிலும் குற்றப்பரம்பரையினர் என்று கூறுவது சரியல்ல என்பதற்கு தகுந்த விளக்கம் தரப்பட்டு தீர்மானங்களும் போடப்பட்டிருக்கின்றது. ஆனால், திரு. சுப்ரமணியம் அவர்கள் அதையெல்லாம் அறிந்திருந்தும், வேண்டுமென்றே திரும்பத் திரும்ப வன்னியர்களில் குற்றப் பரம்பரையினர் என்று சொல்லிவருகிறார்.

சென்னை சட்டசபையில் 24–11–55ல் வன்னியகுல க்ஷத்திரிய மாணவர்கள் கல்விச் சலுகை சம்மந்தமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, மந்திரியார் அளித்த பதிலைப் பார்த்தால், அதன் உட்கருத்து விளங்கும். அவர் வன்னியர்மீது கொண்டிருக்கும் வெறுப்பும் தெரியும்.

"வன்னியகுல க்ஷத்திரிய மாணவர்கள், தங்களது பெற்றோர்கள், பழைய குற்றப் பரம்பரையினர் என்று அத்தாட்சி பத்திரங்கள் சமர்ப்பித்தால் முழுச் சம்பள வஜா தரப்படும்" என்று மந்திரி கூறினார். இந்தச் செய்தி அன்றைய 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. அதை அப்படியே எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

மந்திரியார் அவர்கள் எல்லா வன்னிய குல மாணவர்களுக்கும் அளிக்கப்பட்ட கல்விச் சலுகையை எடுத்துவிட்டு, பழைய குற்றப் பரம்பரையினருக்குமட்டும் கல்விச் சலுகை என்று இப்போது செய்துவிட்டார்,

மந்திரியாரின் மாற்றப்படியே வன்னியர்களில் சிலர் பழைய குற்றப் பரம்பரையினர் என்று முன் பதிவு செய்திருந்தவர்களின் மாணவர்கள் மட்டும் கல்விச்சலுகையைப் பெறுகிறார்கள், குற்றப் பரம்பரையினர்கள் என்றல்லாத வன்னிய மாணவர்கள் அந்தச் சலுகையைப் பெற முடியாமல் போய்விட்டது.

மந்திரியார் அவர்களை எல்லா வன்னிய மாணவர்களுக்கும் கல்விச் சலுகை கொடுக்கப்படாதது ஏன் என்பதுபற்றி கேட்டால், அதற்கு அவர் "வன்னிய குல க்ஷத்திரிய மாணவர்கள் தங்களின் பெற்றோர்கள், பழைய குற்றப்பரம்பரையினர் என்று அத்தாட்சி பத்திரங்கள் சமர்ப்பித்தால் முழுச்சம்பள வஜா தரப்படும்" என்று கூறுகிறார். இது எவ்வளவு தவறான பதில், திமிர் பிடித்த பேச்சு என்பதை வன்னிய மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

வன்னிய மக்களிலேயே குற்றப் பரம்பரையினர்கள் என்று இப்போது எவருமில்லை என்பதை மேலே ஆதாரத்துடன் திருஎன்.டி. கோவிந்தசாமி கச்சிராயர் அவர்கள் கூறியதை குறிப்பிட்டிருக்கிறோம். குற்றப் பரம்பரையினர்கள் என்று வன்னியர்களிலே ஒரு பிரிவு இல்லை என்னும் போது, எல்லா வன்னிய மாணவர்களையும் குற்றப் பரம்பரையினர் என்று அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கச் சொல்வது திமிர் பிடித்த பேச்சைத் தவிர வேறென்ன?

மந்திரியார் அவர்கள் வன்னியர்களிலே குற்றப் பரம்பரையினர் என்று சொல்லுவதே பெரிய தவறு. அதோடு எல்லா வன்னிய மாணவர்களையும் குற்றப் பரம்பரையினர் என்று சேர்க்கக் கேட்பது அதைவிட இமாலயத் தவறல்லவா?

சுப்ரமணியம் அவர்கள் இப்படி அடிக்கடி வன்னியர்களில் குற்றப் பரம்பரையினர் என்று இல்லாததை இருப்பதாக வைத்து இழிவுபடுத்தி கூறுவதைப் பார்க்கும் போது நமது மனம் வேதனையும் ஆத்திரமும் அடைகிறது. அப்படித்தான் இனவுணர்ச்சி உள்ள வன்னியர்கள் அத்தனை பேருடைய மனமும் இருக்கும்.

ஆனால், நமது தலைவர்களுக்கு அப்படி இருக்கிறதா?

சுப்ரமணியம் அவர்களின் அருகில் அமர்ந்திருக்கும் நமது இரு மந்திரிகள், எதிரும்புதிருமாக அமர்ந்திருக்கும் நமது இன எம்.எல்.ஏக்கள் மனம் அப்போது இதை எப்படி சகித்துக்கொண்டிருந்தது என்பது தெரியவில்லை. மந்திரியார் அப்படிப் பேசியதை கை தட்டி ஆதரித்தார்களா? அல்லது தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தார்களா? என்னவென்று புரியவில்லை.

நமது மந்திரிகளும். எம். எல். ஏக்களும், வன்னியர்களின் முன்னேற்றத்திற்காக. இழிவைத் துடைத்து உயர்வை அடைய தத்தமது உடல் பொருள், ஆவி மற்றும் என்னென்னெல்லாமோ தியாகம் செய்யச் சட்டசபைக்குச் சென்றவர்கள், அவர்கள் உடல், பொருள், ஆவியை விடவேண்டாம். நமது இன இழிவு நீக்கத்திற்கு பெருமுயற்சிதான், எடுத்தார்களா என்பதே சந்தேகமாக இருக்கிறது; இல்லாவிட்டால், சுப்ரமணியம் அவர்கள் இவ்வளவு இறுமாப்புடன்

மீண்டும் மீண்டும் நம்மை இழிவு படுத்தி பேசி வரமாட்டார் அவர் குற்றப் பரம்பரையினர் என்று சொல்ல வாயெடுக்கும்போது 'கனம் மந்திரி சுப்ரமணியம் அவர்களே! தாங்கள் எங்களில் குற்றப் பரம்பரையினர் இருப்பதாக எண்ணிப் பேசுவது தவறு. பல ஆண்டுகட்கு முன்பு ஆட்சி செய்த பொப்பிலி ராஜா காலத்தில் வன்னியர்களை குற்றப் பரம்பரையினர் என்று கொண்டுவரப்பட்ட சட்டமானது, எங்கள் வன்னியப் பெரியார் உயர்திரு. கே. ராமச்சந்திர படையாட்சி அவர்களின் கடும் எதிர்ப்பினால் உடன் நீக்கப்பட்டது. அதை தாங்கள் தெரிந்துகொள்ளாமலும், எங்களின் பண்டைய இனப் பெருமையைபுரிந்துகொள்ளாமலும் இப்படி அடிக்கடி பேசுவது சரியல்ல மிகுந்த தவறானது ஆகையால் தாங்கள் தயவு செய்து இனி அப்படி ஒரு முறையும் குற்றப் பரம்பரையினர் என்று சொல்லி விடாதீர்கள். மீண்டும் தாங்கள் அப்படிச் சொல்ல ஆரம்பித்தால் நாங்களும் தங்களை திருப்பிப் பிடிக்க நேரிடும். இதுவே தங்களுக்கு "இறுதி எச்சரிக்கை" என்று சூடாக பதில் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் சொன்னால், அவர் சற்று யோசித்துப் பேசுவார். வன்னியரைபற்றி பேசுவதையே விட்டுவிடுவார். அப்படி ஒரு வன்னிய மெம்பராவது மந்திரிக்கு பதில் கொடுத்ததாகத் தெரியவில்லையே! ஏன் என்ன காரணம்?

நமது பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கல்வி மந்திரியார் குற்றப் பரம்பரையினர் என்று பேசுவதைக் கண்டித்து, கண்களில் கனல் பொறி பறக்க கர்ஜிக்கும் நமது தலைவர்கள் சட்டசபையில் மந்திரியார் பேசுவதை பார்த்துக் கொண்டிருப்பதேன்? பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் விளாசுவது, சட்டசபையிலே வாய் மூடி மௌனியாய் இருப்பது! வன்னியர்களிடம் கை தட்டலுக்கும், பிறகு ஓட்டு தட்டுதலுக்கும் அப்படி வீராவேசமாகப் பேசுவது; அவை பெற்றபின் மந்திரியாரிடம் தமது 'நட்பு' போய்விடுமே என்று வாய் மூடி இருப்பது! இது தானே இன்று நமது இன மந்திரிகள், எம். எல். ஏக்கள் நடத்தி வரும் தந்திரமான முறை! இதை வன்னியப் பெருமக்கள் நன்கு சிந்தித்துப் பார்த்து அத்தகையோருக்கு நல்ல பாடம் கற்பிக்க முன்வர வேண்டும்.

ராஜாஜி அவர்கள் ஆட்சிகாலத்தில் சுப்ரமணியம் அவர்கள் ராஜாஜிக்கு அனுமார்போல இருந்து, தமிழர் முன்னேற்றத்திற்கு விரோதமாகக் கொண்டுவந்த புதுக் கல்வித் திட்டம் முதல்—மற்ற சில ரகசியத் திட்டங்கள்வரை ஒத்துப் போனவர். அதனால் அவரை எல்லோரும் ராஜாஜிக்கு அடிமை, அனுமார், விபீஷணன், இனத் துரோகி என்றெல்லாம் பெயருக்கு முன்னால் சேர்த்து சொல்லிவந்தார்கள். சில பத்திரிகைகள் அவரை அனுமாராகவே கேலிச் சித்திரம் தீட்டி வெளியிட்டன. ராஜாஜி அவர்கள் பதவியைவிட்டுப் போனவுடன், சுப்ரமணியம் தானே அந்த புதுக்கல்வித் திட்டத்தை எடுத்தபின், அவரை அனுமான் சுப்ரமணியம் என்று அழைப்பதை நிறுத்தி விட்டனர்.

இனி நாம் அவரை 'அனுமார்' சுப்ரமணியம் என்றே அழைக்க வேண்டும். சட்டசபை அங்கத்தினர்களும் அப்படியே கூறவேண்டும். அனுமார் சுப்ரமணியம் செல்லுமிடங்களிலெல்லாம் பெரிய பெரிய அட்டைகளில் அனுமார் போல அவரது உருவம் எழுதியோ எழுதாமலோ 'அனுமார் சுபரமணியமே திரும்பிப்போ' என்று எழுதி அவர் கண்களில் படும்படியாக கட்டிவைக்கவேண்டும். அதோடு கருப்புக்கொடி கூட பிடிக்கலாம், இன்னும் இதுபோன்ற சில திட்டங்களை இன உணர்ச்சியுள்ள நமது தலைவர்கள் தீட்டவேண்டும். இல்லையேல் நாம் நமது தலைமுறையிலும் கூட இந்த இழிவை நீக்காதவர்களாவோம். நமக்கு மானம் தான் பெரிது, மற்றவை அல்ல!

அடுத்து திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் கூறியிருக்கும் புகாருக்கு அனுமார் சுப்ரமணியம் அவர்கள் கூறியிருக்கும் பதிலிலாவது அர்த்தமிருக்கிறதா என்று பார்ப்போம்.

வன்னிய குல க்ஷத்திரியர்களில் அநேக பிரிவுகள் உள்ளன. ஒரு பிரிவினர் ராயர் என்ற அடைமொழி யுள்ளவர்கள் அவர்களை பிராமணர் என்று தவறாக எண்ணி சம்பள சலுகை தரவில்லை என்று திரு. ஏ. கோவிந்தசாமி புகார் செய்தார். இதற்கு சரியாக என்ன பதில் சொல்ல வேண்டும்?

திரு. கோவிந்தசாமி அவர்களின் புகார் உண்மையென்றால், அதை அனுமார் சுப்ரமணியம் கவனிப்பதாகக் கூறவேண்டும். இல்லாவிட்டால் புகார் தவறானது என்று சொல்ல வேண்டும். அதுதானே சரியான முறை! அப்படி இல்லாமல் "முழுச் சீர்திருத்த வாதியான ஸ்ரீ கோவிந்தசாமி பட்டப் பெயர்களை விட்டுவிட்டு ஒரே ஜாதிப் பெயர் சூட்டிக்கொள்ள ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கலாம்" என்று பதிலளித்திருக்கிறார். அதைஅவர் கூறியபோது சபையில் பலத்த சிரிப்பு ஏற்பட்டது என்று சு. மி. பத்திரிகை எழுதுகிறது.

திரு. கோவிந்தசாமி புகாருக்கு இது சரியான பதிலா? கேள்விக்கும் பதிலுக்கும் துளியாவது அர்த்தம், புத்திசாலித்தனம் இருக்கிறதா? இதைக் கேட்ட சபையோர் பலத்த சிரிப்பு சிரித்தார்களாம்! என்னே அறியாமை!

அனுமார் சுப்ரமணியத்தின் பதில் அர்த்தமற்றது, விஷமத்தனமானது என்று இடித்துக் காட்டி திருத்த வேண்டிய சட்ட சபை அங்கத்தினர்கள் மாறாக சிரித்தார்களாம்! சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வளவு நுணுக்கமாக—புத்திசாலித்தனமாக கேள்வி—பதிலை கவனிக்கிறார்கள் பார்த்தீர்களா? இப்படிப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களை பெறுவதற்கு தமிழர்கள் என்ன மாதவம்தான் செய்தார்களோ!

★

## இடம் தப்பினால்?

ஒரு வீட்டில் ஒரு அழகான நாய்க்குட்டியும், ஒரு கோவேரிக் கழுதையும் வசித்து வந்தன, நாய்க்குட்டியை வீட்டு எஜமான் மிகவும் பிரியமாக வளர்த்து வந்தார். அவர் சாப்பிடும்போது, கூட இருந்து சாப்பிடும். அவரது மடியில் புரண்டு விளையாடும், இதையெல்லாம் பார்த்த கோவேரிக்கழுதை, நாய் எஜமானரிடம் விளையாடுவதால்தான், அவர் அதன்மேல் பிரியமாக இருக்கிறார் என்று நினைத்தது. தானும் அதுபோல இருக்கவேண்டுமென்று நினைத்தது. ஒருநாள் எஜமானர் தனியாக அறையில் உட்கார்ந்துபடித்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த கழுதை, அறைக்குள் நுழைந்து நாய்க்குட்டியைப் போல அவரைச் சுற்றிச்சுற்றி வந்தது. மெல்லக் கனைத்தது. இந்த வேடிக்கையைக் கண்ட எஜமானர் சிரித்தார். இதில் உற்சாகம் கொண்ட கழுதை அவரது தோள்மீது தனது கால்களைப் போட்டுக்கொண்டு முகத்துக்கு நேராகக் கனைத்தது. இந்த கோரத்தைக் கண்டு எஜமானர் பயந்து கூச்சல் போட்டார். வேலைக்காரர்கள் ஓடிவந்து கழுதையைத் தடிகொண்டு தாக்கி விரட்டினர்

—(சரஸ்வதி)

# காலண்டர் வரலாறு

ஆங்கிலக் கணக்குப்படி புது வருடம் பிறந்துவிட்டது. ஆங்கில மாதம் அல்லது ஆங்கிலத் தேதிகள் என்று நாம் சொல்லும் காலண்டர் ஆங்கிலேயர்களால் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது இல்லை!! காலண்டரிலே அடங்கியுள்ள ஈருறுமாதங்களுக்கு (அதாவது சனவரி முதல் டிசம்பர் வரை) பெயர் வந்தவிதமே பெரிய கதையாகும். எல்லோரும் அவற்றைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சுருக்கமாக இங்கே தருகிறோம்.

* * *

**சனவரி:—** பண்டைய உரோமானியர்கள் வணங்கிவந்த தெய்வங்களில் 'ஜானஸ்' (Janus) என்பதும் ஒன்று. வானுலகத்தின்வாயில் காப்போன் எனக் கொண்டாடப்பட்ட இத்தெய்வத்திற்கு முன்னும் பின்னுமாக இரண்டு தலைகள் உண்டு. எக்காரியத்தையும் தொடங்கு முன் இத்தெய்வத்தை வணங்குவது வழக்கம். எதற்கெடுத்தாலும் இத்தெய்வம் முன்னணியில் நின்றதால் ஆண்டில் முதல் மாதத்திற்கு அத்தெய்வத்தின் பெயரை வைத்து "ஜனவரி" என்றனர்.

**பிப்ரவரி:—** உலூப்பெர்கல் என்ற தெய்வத்திற்கு நடக்கும் திருவிழாவான பெப்ரூவர் (Februar) வை ஒட்டி ஒரு மாதத்திற்கு பெப்ரவரி எனப் பெயரிட்டனர். இப்பெயரிடப்பட்ட மாதம் கி. பி. 450-ம் வருடக் கடைசியில் (தற்போதைய டிசம்பருக்குப் பதில்) கடைசி மாதமாக இருந்தது. பின்னர் இரண்டாவது மாதமாக்கப்பட்டு மீண்டும் கடைசி மாதமாக்கி சீசர் காலத்தில் மீண்டும் இரண்டாவது மாதமாக்கப்பட்டது.

**மார்ச்:—** உரோமானியர்களின் போர்க் கடவுளுக்கு (Mars) என்று பெயர். இத்தெய்வம் மிகுந்த சக்தி வாய்ந்ததென்றும் இடி, மின்னல்கள் ஏற்பட இத் தெய்வமே காரணமென்றும் உரோமானியர் கருதி வந்தனர். ஆகவே அத் தெய்வத்தின் பெயரால் ஒரு மாதத்தை 'மார்ச்' என அழைத்தனர்.

**ஏப்ரல்:—** வருடத்தின் நான்காவது மாதத்தில்தான் இலையுதிர் காலம். அகன்று செடிகள் துளிர்க்க ஆரம்பிக்கின்றன. இதை "ஓம்னியா ஏப்பிரட்" (Omnia Aperit) என மகிழ்வுடன் கூறுவார்கள். (Aperit) என்ற உரோமானியச் சொல்லுக்கு தோற்றுவித்தல் என்பதுபொருள். ஆகவே அதையொட்டி நான்காவது மாதத்திற்கு (April) எனப் பெயரிட்டனர்.

**மே:—** உரோமானியர்களின் பெண் தெய்வமாகிய மேயா (Maia) வின் பெயரால் மே என்ற பெயர் வந்தது.

**ஜூன்:—** 'ஜுனோ' (Juno) என்ற பெண் தெய்வத்தின் பெயரால் ஜூன் என்றும், 'ஜுனியஸ்' (Junius) என்ற வீரன் பெயரால் ஜூன் என்றும் பெயரிடப்பட்டதாக இருசாரார் இருவிதமாகக் கூறுகின்றனர்.

**ஜூலை:—** இம்மாதம்ஒரு காலத்தில் வருடத்தின் ஐந்தாவது மாதமாக இருந்ததால் 'ஐந்தாவது' என்பதைக் குறிக்க 'குவின்டிலிஸ்' (Quintils) என்ற பெயருடன் விளங்கிற்று. பேரரசர் சீசர் காலத்தில் ஆண்டின் முதல் மாதமாக இருந்த 'மார்ச்' மூன்றாவது மாதமாக மாற்றப்படவே 'குவின்டிலிஸ்' (ஐந்தாவது மாதம்) ஏழாவது மாதமாக மாறியது. குவின்டிலிஸ் என்ற பெயரும் பொருந்தாதுபோகவே ஜுலியஸ் சீசரின் ஞாபகார்த்தமாக (அவரும் இம்மாதத்தில் தான் பிறந்தார்) ஜூலை எனப் பெயரிடப்பட்டது.

**ஆகஸ்ட்:—** இம்மாதம் ஒரு காலத்தில் ஆறுவது மாதமாக இருந்ததால் ஆறுவது என்ற பொருள்பட 'செக்ஸ்டிலிஸ்' (Sextils) என அழைக்கப்பட்டது. பின் இது எட்டாவது மாதமாக மாறியது. அப்போது அப்பெயர் பொருந்தாதுபோகவே அகஸ்டஸ் (Augustus) என்ற அரசனின் பெயரால் ஆகஸ்ட் எனப் பெயரிடப்பட்டது.

* * *

செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் இவைகள் ஒரு காலத்தில் முறையே ஏழாவது, எட்டாவது ஒன்பதாவது, பத்தாவது மாதங்களாக இருந்தன. ஆகவே அப்பொருள்பட உரோமானிய மொழிப்படி செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் என அழைக்கப்பட்டன. பின்னர் இவைகள் ஒன்பதாவது பத்தாவது, பதினொன்றாவது பனிரெண்டாவது மாதங்களாக மாற்றப்பட்டும் பெயர்கள் மட்டும் மாறவில்லை. இதுதான் கதை. உலகெங்கிலும் பொதுவாக வழக்கத்திலுள்ள இக்காலண்டர் ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல என்பதையும் தமிழகத் தொடர்பு கொண்டிருந்த உரோமானிய மக்களால் கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும் இதன் மூலம் அனைவரும் தெரிந்து கொள்ளலாம். எனினும் மக்கள் யாவரும் ஆங்கில மாதம் என்றும் ஆங்கிலக் காலண்டர் என்றும் கூறுகின்றார்களே தவிர உரோமானியக் காலண்டர் என்றோ மாதமென்றோ கூறவில்லை, அதற்குக் காரணம் யாதோ தெரியவில்லை.

("தமிழ் நாடு")

## வாசகர்களுக்கு

—:o:—

15—1—'56 அன்று வரவேண்டிய "திராவிடநாடு" இதழ், பொங்கல் மலராக அன்றைய தினம் வெளியூரில் கிடைக்கும். திராவிடர் திருநாளையொட்டி, நமது அலுவலகத்துக்கு விடுமுறையாதலால் 22—1—'56ந் தேதி வரவேண்டிய இதழ், வராது. 29—1—'56ல் இதழ், மீண்டும் வரும்.

—நிர்வாகி.

# சீச்சி! இந்தப்பழம்......!!

[அண்ணா]

"தேசாபிமான வீரரைச் சிறைச்சாலை என்ன செய்யும்? என்று பாடிய வண்ணம், இந்திய துணைகண்டத்தின் விடுதலைப் போரின்போது, எண்ணற்றோர் சிறைக் களம் புகுந்தனர்! செக்கிழுத்தார், சிதம்பரனார்—தெருவிலே, குருதி கொட்டக் கொட்ட கொடி ஏந்திய வண்ணம் உயிர் விட்டார் வாலிபத் தோழர் குமரன்—பஞ்சாப் பகவத் சிங்கம், தூக்கிலே மாண்டார் அத்தங்கம்—சொல்லொணாக்கொடுமைகளை அனுபவித்தோம், அந்நியன் ஆட்சியில். சுபாஷ் போஸ், வங்கத் தாயின் வீரமைந்தர்—இந்நாட்டைவிட்டே ஓடி, ஏதேதோ செய்து, பிணமானார்! சுதந்திரத்துக்காகச் சுகமான வாழ்வை இழந்து சுக்கு நூறாய்ப் போனோர் தொகை ஏராளம். இந்திய மண்ணில் மட்டுமா! எங்கெங்கு சுதந்திரக் கிளர்ச்சிகள் ஏற்பட்டனவோ, அங்கெல்லாம் ஆயிரமாயிரம் வீரர்கள், வெங்குருதி கொட்ட வீரமரணம் எய்தியிருக்கிறார்கள். அவர்களின் பட்டியல், நாம் நடத்திய சுதந்திரப் போரின் விளைவாக அதிகமாயிற்று! ஜாலியன் வாலா-பாக் படுகொலையின்போது, மாண்டவர்கள் தொகை கொஞ்சமா? தண்டி யாத்திரையின்போது தடியடி பட்டோர் எண்ணிக்கைதான் எண்ணக் கூடியதா! சிட்டகாங் வீரர்கள், வெள்ளையனின் ஆதிக்கத்தை அழிக்க நடாத்திய வீரப் போரைச் சாமான்யமென்று சொல்ல முடியுமா? நான்கு ஆண்டுகள், சிறைவாசம் பெற்றார் எமது நேரு—போருக்கு பண உதவி தரமாட்டோம், என்றோர் வார்த்தை சொன்னதற்காக; வீர சவர்க்கார், கப்பலிலே குதித்து வந்திருக்கிறார்—அரவிந்தர், புதுச்சேரிக்கு ஓடி அடைக்கலம் புக நேர்ந்தது. அடடா! சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்தோரின் பட்டியலைச் சாதாரணமாகத் தயாரிக்க முடியுமா? கதறும் பெற்றோரைப் பிரிந்து, காதல் மொழி பேசும் மனைவி மக்களைத் துறந்து, மனித உரிமைக்காக அறப்போர்க் களம் புகுந்த ஆயிரமாயிரம் தியாகிகளின் குருதியிலே முளைத்ததுதான், நமது சுதந்திரத் தரு! அந்த வீரத் தியாகிகளின் சேவையை மறந்தோமெனில், எந்நாளும் நமக்கு உய்வில்லை. நமது சந்ததி வாழ, தியாகங்கள் செய்த சிலர்களன்றோ அவர்கள்? அவர்தம் திருநாமமே, நமது தாரக மந்திரமாக விளங்க வேண்டும்!"

* * *

இவ்வண்ணம் மெய்சிலிர்க்க உள்ளம் மரியாதை காட்ட, உரைப்பீர்களே, தேசியத் தோழர்காள், உங்களைப்பார்த்துத் தெரிவிக்கிறார் ஒருவர்—அவர்கள் சேவை, மிகச் சாதாரணமானதாம்.

"என்ன? எந்தப் பேதை சொன்னது? சுதந்திரம் நாடிப் போராடிய எமது தியாகிகள் பணியினை இழுக்குச் சொல்லும் இழிமதி படைத்தோர் யார்? செக்கிழுத்த சிதம்பரம் அவமானம் செய்யப்படுகிறாரா? குமரா! உன்னையும் கேலி செய்யும் கொடும் புலி, யார்?", என்று கனல் பறக்க, எம்மை நோக்கி, நீங்கள் கேட்பது தெரிகிறது. என்ன செய்வது? நீங்கள் நினைப்பதுபோல, மாற்றாரல்ல, மந்த மதி கொண்டவருமல்ல. மகா மேதை எனப் பெயர் பெற்றவர்—நேரு பண்டிதராம், இந்தியத் தலைவரின் அத்யந்த சகா-அன்பர் ஆச்சாரியார் தெரிவிக்கிறார், இவ்விதம்!

அவரா? எங்கே காட்ட முடியுமா, உம்மால்?—என்று உங்கள் விழிகளில் வியப்பும் திகைப்பும் பரவுவது தெரிகிறது, எமக்கு. ஆதாரமில்லாமல், இந்த 'ஆபத்தான' தகவலைச் சொல்லவேண்டிய அவசியம் எமக்கில்லை—விடுதலைபுரிப் பயணத்தின் வாயிலில் நிற்போர் என்பதால் என்றுமே விடுதலை வீரர்களையும், அவர்தம் தியாகங்களையும், பெரிதெனக் கருதுவோர் நாங்கள் — கருத்தலைகள் இருந்தாலும், கொண்ட கொள்கைக்காகக் குருதி சிந்தியவர்களையும், மக்களின் அடிமைத் தளைகளை அறுத்தெறிய மாபெரும் தியாகம் செய்த செம்மல்களையும், மறக்காதவர்கள், நாங்கள். அவர்களுக்கு, எமது மனக் கோயிலில், மதிப்பும் மரியாதையும் கூட உண்டு.

தெளிவாகச் சொல்லவேண்டுமானால், அடிமைத் தளையில் அகப்பட்டுக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பும் திருப்பணியிலீடுபட்டவர்கள் எவராயினும்மாற்றுக்கட்சிகளில் மட்டுமல்லவெளிநாடுகளிலிருந்தாலும் கூட அவர்தம் புகழுரையைப் பேசக்கூடியது எமது நாக்கு! எழுதக் கூடிய கரங்கள் எங்களுடையது!! அதனாற்றான் உரிமைக்குப் போராடிய ஆபிரகாம் லிங்கனையும், உயிரிழந்து தம் பொதுப் பணியின் அவசியத்தை வலியுறுத்திய சாக்ரடீஸ், உரிமைக் குரலெழுப்பிய மாஜினி—கரிபால்டி—வால்டேர் போன்ற அறிஞர்கள், மதத்துறையில் புதுமைகாண விழைந்து நீக்குண்டத்துக்கும் தீயர் தம் கொட்டத்துக்கும் ஆளான லாட்டிமர், ரிட்லி, ஜான்ஹஸ், புதிய பொருளாதாரத் தத்துவம் தந்த மார்க்ஸ், அவரது பாதையில் நடந்து வெற்றிகண்ட லெனின், புதிய பாதை காண முயன்ற கமால், சன்-யாட்-சன், அறநெறி உரைத்த புத்தர், இயேசு, முகம்மது இதுபோல யாரார் மனித குலத்துக்குப் பாடுபட முன்வந்து கஷ்டநஷ்டங்களை ஏற்றனரோ, அவர்தம் புகழையெல்லாம் எடுத்துச் சொல்லத் தயங்குவதில்லை. உத்தமர் காந்தியடிகளுக்கும் எமக்கும் கருத்துவேற்றுமைகள் உண்டு! எனினும், 'உத்தமர்' என்று

முதன் முதல் நாங்கள் மனதார அழைத்தோம்; காரணம், அவர் மக்களுக்குச் செய்த பணியின் பலன் பெரிது; சுதந்திர விளக்கை ஏந்திய திருத்தூதர் என்பதால்.

* * *

எங்கெங்கு, விடுதலைத் தாகமும், இருளில் ஒளி பரவச் செய்யும் உத்தமப் பணியும் உண்டாக யார் யார் காரணமோ, அவர்களை யெல்லாம் நாவார வாயாரப் பாராட்டத் தயங்குவதில்லை என்றும்! அந்த வகையில், அரசியல் மாறுபாடுகள் உளதெனினும், அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை; எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்று தியாகம் பல புரிந்தோரின், திருநாமங்களை நாங்கள் வாழ்த்தத் தவறுவதில்லை.

நாங்கள் மட்டுமல்ல, நல்ல பண்பும், உயர்ந்த நோக்கம் கொண்ட யாரும் இந்த உத்தமர்களின் திருப்பணியை ஏசார்! ஏதுமுரைக்கார்!!

* * *

துப்பாக்கி பேசுமடா, பேசும்!

தூ! அது என்ன செய்யும் எம்மை?

தடிகொண்டு அடிப்போம்!

தடியனே குருதிதானே ஓடும், தரையில்.

செக்கிழுக்கச் செய்வோம்.

அவ்வளவுதானே, உன்னால் முடியும்?

அதோ, தூக்குமேடை!

இதோ, தயார் நாங்கள்.

நச்சுக்கோப்பை! வறுமைப்புயல்! கானக வாசம்! குண்டடி!—என்று இவ்வாறு ஆதிக்க புரியினர் மிரட்டியபோதும் "மக்கள் பணியே, மகேசனுக்குச் செய்யும் பணி! அவர்கள் சுகமாக வாழ, எமது சொந்த சுகத்தையும், சுயநல வாழ்வையும் இழப்போம்" என்று சூளுரை எழுப்பும் தூய மணிகளின், தொண்டுள்ளத்தைப் பெரிதென எண்ணுவோர், யாம். அதனால்தான், அன்பர் ஆச்சாரியார் அவ்வண்ணம் தீட்டியது காண திகைப்புற்றோம்—ஆச்சாரியார் என்ன சரிதம் அறியாதவரா? தன்கூட இருந்தோர் கொட்டிய குருதியினைப் புரியாதவரா!—எனினும், எழுதியிருக்கிறாராம், பம்பாய் பாரதீய வித்யாபவன் வெளியிட்டிருக்கும் அவருடைய 'வியாசர் விருந்து' எனும் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு எழுதிய முன்னுரையில். 'கல்கி' தெரிவிக்கிறது, அந்த விபரத்தை.

**"அரசியல் தொண்டனாகவும், தேசப் பணியாளனாகவும் இருந்து நாட்டு நலனுக்கான பதவிகளை ஏற்பதும் தீவிர சேவை செய்வதும் நல்ல காரியங்களே ..."**

இது, எப்படி இழிவு செய்ததாகும்? நல்ல காரியங்களே, என்றன்றோ கூறியுள்ளார் எனக் கேட்கக்கூடும் நண்பர்கள்! நல்ல காரியங்களே—'ஏ'காரம், எதனைக் குறிக்கிறது. "கந்தனும் முத்தனும் செய்வது; நல்ல காரியங்களே" என்று சொல்லிவிட்டு, அடுத்த வரியிலேயே.........."ஆனால், சோமுவும் சுப்புவும் செய்வதே மிகச் சிறந்தது" என்று சொல்லிடின் என்ன பொருள்? 'ஏ'காரம், எதனைக் குறிக்கிறதென அறியீரோ, நீர்! கந்தனும், முத்தனும் செய்வது—ஏதோ அவர்கள் மனம் புண்படக்கூடாதே என்பதற்காக—அரை குறை மனதுடன் ஒப்புகொள்கிறார், 'நல்ல காரியங்களே' என்று. ஆனால், அவர் பாராட்டுவது, யாரை? சோமுவையும், சுப்புவையும்தானே! அதற்கு என்ன பொருள்? இதைக் கேட்கும், கந்தனுக்கும் முத்தனுக்கும் எப்படியிருக்கும்! அரசியல் தொண்டனாகவும், தேசப்பணியாளனாகவும் இருந்து சேவை செய்பவர்களை, அவர்களிடத்திலே வைக்கிறார். அதற்கடுத்தபடியாக, அதைவிடச் சிறந்த பணியாற்றுபவர்கள் யாரென்பதையும் விளக்குகிறார். அவர்கள் யார் தெரியுமா?

**"...ஆனால் மேற்கண்ட பணிகளை விடச் சிறந்ததாக என் அனுபவத்தில் நான் கண்டது என்னவென்றால்..."**

எதுவாக இருக்க முடியும்? நீங்களும், நானும் எது பெரியதோர் திருப்பணியெனக் கருதுகிறோமோ, அதனை மிகமிகச் சாதாரணமாக்கி விட்டு அன்பர் ஆச்சாரியார், தெரிவிக்கும் சிறந்த பணியினை இதோ, அறிவீர்,

**"...அப்பணிகளைத் துறந்து, நம் நாட்டு மகரிஷிகளின் கூட்டுறவில் வாழ்ந்து, அவர்கள் இன்றைய மக்களோடு மீண்டும் உறவாடுவதற்கு வேண்டிய காரியத்தைச் செய்து கொடுப்பதேயாகும்!"**

போதுமா! ஆச்சாரியாருக்கு, பெரியதோர் பணியாகத் தெரிவது நம் நாட்டு மகரிஷிகளின் கூட்டுறவில் வாழ்வதும்—மீண்டும் அவர்களை இன்றைய மக்களோடு உறவாடுவதற்கு வேண்டிய காரியத்தைச் செய்வதுமேயாகும்!

"எங்க தாத்தாவுக்கும் தாத்தாவை அழைத்துவந்து சாப்பாடு போடப்போகிறேன்" என்றால், பித்தமோ இவனுக்கு என்பீர்கள் எல்லோரும்! ஆச்சாரியார், அடிக்கடி கீழ்ப்பாக்கத்து—'கல்கி' ஆபீசுக்காக—போகிறவரேயொழிய, பித்தரோ, பேதமதிகொண்டு பிதற்றுபவரோ அல்ல; காரியவாதி; தெரியாமலா, சாணக்கியர் என்கிறீர்கள், தேசியத் தோழர்களாகிய நீங்கள்.

பழைய ரிஷிகள் செய்த இதிகாசங்களை மக்களிடம் மீண்டும் நுழையச் செய்ய வேண்டும்! — இதைத்தான் சுற்றி வளைத்துச் சொல்லுகிறார், ஆச்சாரியார், 'கல்கி'யில்.

'தினமணி' போன்ற ஏடுகளில் செய்தி கொஞ்சம் விளக்கமாகவே, வந்தது; **"என்னுடைய வாழ்நாளில், நான் செய்த சிறந்த சேவையாகக் கருதுவது, இராமாயண மகாபாரத இதிகாசங்களை, எல்லா மக்களுக்கும் புரியும்படியாக எழுதியதுதான்"** என்பதாக.

இந்தப் பணி, அவருக்கு, அரசியல் தொண்டனாகயிருந்து பாடுபடுவதை விடப் பெரிதாக இருக்கிறது! தேசப் பணியாளனாக இருப்பதைவிடத் தித்திக்கிறது!!

பாராளும் பணியைவிட, பஜனை செய்யும் வேலை சிறந்தது—சிலாக்கியமானது, என்கிறார்.

அனுபவத்தில், நான் கண்டது— என்கிறார்.

உண்மைதான், பாராளும் பணியில், அவருக்குப் போட்டி புகைச்சல்கள் எல்லாம் இருக்கிறது! இந்தப் பணியில் நிச்சயம் அது, இருக்காது!!—அந்த வகையில், அவர் அனுபவத்தில் கண்டதுபொருந்துமெனலாம்.

ஆனால்; அந்தளவோடு அவர் நிறுத்தவில்லை, மற்றொரு பகிரங்கப் பொய்யும் புகலுகிறார், "என் அனுபவத்தில் நான்கண்டது என்னவென்றால், அப்பணிகளைத் துறந்து..." எந்தப் பணிகளைத் துறந்துதெரியுமோ? அவருடைய உரையின், தலைப்புக்குச் செல்லவேண்டும் இப்போது!

**"அரசியல் தொண்டனாகவும், தேசப் பணியாளனாகவும் இருந்து, நாட்டு நலனுக்கான நல்ல பதவிகளை ஏற்பதும்..."**

*யாராவது அவரைப் பார்த்து "என்னய்யா! ஏதோ, தேசத் தொண்டனாக இருந்ததால், திசை கெட்டுப் போய்விட்டது போலத் தெரிவிக்கிறீரே? அப்படி யென்ன செய்தீர்! ஆபத்து வந்த சமயங்களிலெல்லாம், எங்களைப் புறக்கணித்துவிட்டு ஓடியிருக்கிறீர்! அப்படியிருந்தும், உம்முடைய வாழ்வென்ன, சிதைந்து சின்னா பின்னமாகவா ஆகிவிட்டது வரதராஜுலு நாயுடுக்களைப் போல, திரு. வி. க-க்களைப் போல!! தேசத்தின் பெரிய பதவிவரையில் வகித்தீர்—சன்மானமாக மாதா மாதம் ரூபாய் ஆயிரம் பென்ஷனாகவும் வாங்கிக் கொண்டிருக்கிறீர்? தியாகிகள் என்ற பெயரால் எமக்கெல்லாம் ஐந்து ஏக்கர் தருவதற்கு இடையூறாகயிருந்தீர்! அதைத்தவிர என்ன நீர், அலுத்துப்போய்விட்டீர் அதிகமாக...?" என்று கேட்கக் கூடுமல்லவா, அதனால் வெகு எச்சரிக்கையாக, "நாட்டு நலனுக்கான பதவிகளை ஏற்பதும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். குல்லூகபட்டராயிற்றே! அப்படிக் குறிப்பிட்டு விட்டு, "அப்பணிகளைத் துறந்து, நம் நாட்டு மகரிஷிகளின் கூட்டுறவில் வாழ்ந்து..." என்று கூறுகிறார். இந்த இடம், உண்மையிலேயே, நகைச் சுவையைத் தருகிறது, நமக்கு!!*

*ஆச்சாரியார், நாட்டு நலனுக்கான பதவிகளை ஏற்று, அதனால் மனம் நொந்து, அப்பணிகளைத் துறந்து, மகரிஷிகளின் கூட்டுறவுக்குப் போய் விட்டாராம்! அதனால் அரசியல் தொண்டனாகவும் தேசப் பணியாளனாகவும் இருந்து தீவிர சேவை செய்யும் காரியங்களை விட நல்ல காரியமான ரிஷிகளின் கூட்டுறவுக்குப் போய் விட்டாராம்!*

*பதவிகளைத் துறந்தாராம்! இவர் துறவிகள் உறவை நாடிப் போய் விட்டாராம்!' ஆச்சாரியாரின் அகராதியில், பதவி எதுவும் வேண்டாமெனத் துறந்தநிகழ்ச்சி என்றாவது உண்டோ? முதலமைச்சராக முதன் முதலில் வந்தபோதும் சரி, கவர்னராகப் பிறகுபவனி வரும் பாக்கியம் அடைந்தபோதும்சரி, மத்யசர்க்கார் மந்திரியாக வாழ்ந்த போதும் சரி, கவர்னர்ஜனரலாக முடிசூட்டிக் கொண்டபோதும் சரி, எப்போதாவது இந்தப்பதவிகளும்பதவிகளா? எம்மான், பெம்மானின் திருக்கலியாணகுணங்களைக் கூறும் இராமாயணபாரத இதிகாசங்களை எடுத்து வீதியெலாம் உரைப்பதை விட இவை எம்மாத்திரம்? க்ஷேத்ரம் தோறும் ஓடி சாயுச்ய பதவியை நாடிடும் பேற்றினும் பெரியவையோ இவை? வேண்டேன்! வேண்டேன்!! என்று இவர் துறந்ததாக, வரலாறே கிடையாது. மாறாக, கவர்னர் ஜனரல் அளவுக்குப் பதவி வகித்த இவர், குடியரசுத் தலைவர் பதவி கிடைக்கவில்லை யென்றதும் கொஞ்ச நாள் சென்னைக்கு வந்திருந்தார், பிறகு, "ஐயா, இங்கே வந்து இலாகா இல்லாத மந்திரியாக இருக்கிறீரா?," என்று நேரு கேட்டதும் செச்சே,எனக்கேன்? என்றாரா, இல்லை போனார், பூணாரம் பூண்ட பூமானாக, அங்கு பொறுக்க முடியாமல், மீண்டும் வந்தார் இங்கு—கவர்னரின் தயவால் MLC ஆனார். முதலமைச்சராகும் வாய்ப்பு வந்தது, துறந்தாரா, தூயவர்? அதுதான், இல்லை, தொத்திக் கொண்டார்! எதிர்க் கட்சியினர், இரண்டோர் முறை அவருடைய சர்க்காரைத் தோல்வியுறச் செய்தும் துறக்கவில்லை, மாறாக துடித்தார் — ஒழிப்பேன் என்று ஓங்காரக் கூச்சலிட்டார் — ஊர் ஊராக ஓடி ஓட்டுப் பிச்சை கேட்டார். கடைசியில், காங்கிரசாரே, பிடித்துத் தள்ளித் துரத்தினார்களே ஒழிய, எந்நாளும் துறந்தவரில்லை. இவர், இப்போதுகூட, MLC யாக ஒட்டிக் கொண்டிருக்கிறாரே ஒழிய, "ஆதலால் பதவி வேண்டேன்! அரங்கமாநகருளானே" என்று போய் விடவில்லை —சமயம் வரும்போது காமராஜருக்குக் கசையடியும், வேறோர் சமயத்தில் நேருவுக்குப் புத்திமதியும் அளிப்பதுபோல சமயம் வரும்! சந்தடிசாக்கில் நுழைய முடியுமா!! என்று ஆரூடம் கணித்துக் கொண்டிருக்கிறார். இதனை, அறியும் இந்த உலகம். எனினும், ஏதோ, முற்றும் துறந்தவர் போலவும் — முனிசிரேஷ்டர்களின் வாழ்வில் இரண்டறக் கலப்பதே பெரியதோர் காரியம் எனவும் எழுதுகிறார்!!*

*சிறு குழந்தைகளுக்கோர் பாடம் உண்டு,*

**சின்னச் சின்ன நரி -**
**சிங்காரக் குள்ள நரி**

**பாதை வழியே போயிற்றும்**
**பார்த்ததாம் திராட்சைக்**
**கொடியை,**

**தத்தித்தாவி முயன்றதாம்.**
**எட்டிப்பறிக்க எண்ணிற்றும்.**
**எதுவும் இயலவில்லையாம்.**
**என்ன இந்தப் பழம் பெரிதோ?**
**எனக்கேன் இது வேண்டாம்!**
**சீச்சி! ரொம்பப்புளிக்குமென்றே**
**தெரிவித்தபடி ஓடிற்றும்.**

*என்பதாக. இதனையே, நினைப்பூட்டிற்று, ஆச்சாரியாரின் இந்தப் புதுச் செய்தி! அவர், ரிஷிகளின் கூட்டுறவில் இரண்டறக் கலப்பதிலோ அல்லது, ரிஷீஸ்வரர்கள், வாழ்ந்ததாகக் கூறப்படுகிற வனங்களை நோக்கிச் செல்லுவதையோ, நாம் தடைகூறவிரும்பவில்லை. அது அவருடைய இஷ்டம். ஆனால் அதற்காக, உலகமெங்கும் ஒப்புக் கொண்டதும், மனித வாழ்விலேயே ஒப்பற்ற பணியெனக் கருதப்படுவதுமான, அரசியல் பணியையும், தேசத்திருப்பணியையும் இவர் ஏன் இழுக்க வேண்டும்? ஆசிரம வாழ்வுக்கும், அதற்குமிடையிலுள்ள தாரதம்யத்தைக் காட்டிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்! தன்னையொத்த நேருவும்—தன்னால் மட்டமாக நினைக்கப்படும் காமராஜ் போன்றோரும் அமர்ந்திருக்கும் இடங்கள் கண்களை உறுத்துவதாலா? எரிச்சலை ஏற்படுத்துவதாலா? எதனால், இப்படி ஒப்பிட்டுப பேசும், உதவாக்கரை விளக்கம் கிளம்ப வேண்டும்? சிறுப்பிள்ளைகளன்றோ, வீதிகளில் இவ்வண்ணம் சண்டையிடும், "உன்னைவிட நான் பெரியவன், என்னைவிட நீ சிறியவன்?" என்று நிரூபிக்க. அந்த விசித்திர வேலையில், ஏன் ஈடுபட வேண்டும், "வியாசர் விருந்து" தருபவரின்மூலை! பஜனைபாடட்டும்; ஆட்சேபனையில்லை. அதற்காகத் தியாகப் பரம்பரைகளுக்கு இழுக்கு தேடும் எண்ணம் ஏற்படுவதை, எப்படி அனுமதிக்க முடியும்? அரசியல் தொண்டனாகயிருப்பதை விட், ஆசிரமச் சீடனாகயிருப்பது மேலாமே!! எவ்வளவு விந்தையான போதனை!!* ★

---

## மகிழ்ச்சி

**நடிகத் தோழர் எம். என். கிருஷ்ணனின் துணைவி பார்வதிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.**

2-ம் பக்க தொடர்ச்சி

மூன்ருமாண்டு தெரிவித்தான்; ஒருவரும் முன்வரவில்லை. கோபம் மூண்டுவிட்டது; நாலாம் ஆண்டு பரிசு தருவதாகப் பறைசாற்றவில்லை, மனதுக்குள்ளாகவே 'சபதம்' எடுத்துக்கொண்டானும், என் தலைவலியை எவன் போக்குகிருனே, அவன் தலையை வெட்டிவிடுகிறேன் என்று — ஏனெனில் நாலு ஆண்டுகாலமாக இவ்வளவு வேதனையை அனுபவிக்கக் காரணம் இவன்தானே, முதல்தடவை முரசு அறைந்தபோதே மூலிகை தந்திருந்தால், கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லையல்லவா! ஆகவே, தலைவலி போக்கும் வழி தெரிந்திருந்தும், மன்னனுடைய மண்டைக் குடைச்சலைப் போக்க முன்வராதவன், கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டியவனே என்று தீர்மானித்தான். அதுபோலவே, ஒரு மருத்துவன் மன்னனுடைய தலைவலியை நீக்கினுன், தன் தலையைப் போக்கிக்கொண்டான் — என்ருேர் கதை உண்டு. அதுபோலவே, ஆச்சாரியார், எந்தத் திட்டம்பற்றி தமது கருத்து, பரிகாரம் கூறுவதாக இருந்தாலும், தேவைப்படும் நேரத்தில், பயன்படக்கூடிய வேளையில், வகையுள்ள விதத்தில் கூறுகிற வாடிக்கையே கிடையாது. மாருக, எவ்வளவு கடுமையாக எதிர்க்கலாமோ, அவ்வளவும் செய்வார்; கடைசிக் கட்டத்திலேயோ, குப்புற விழுவதுபோலாகிவிடுவார். இதற்குள், பிரச்சினை, ஒன்று தீர்ந்துபோயிருக்கும், அல்லது வேறு உருவம் கொண்டுவிட்டிருக்கும், அல்லது, இவருடைய பரிகாரமோ பரிவோ தேவையில்லை என்று கூறத்தக்க கட்டம் பிறந்துவிட்டிருக்கும்.

பொங்கும்போது சிறிதளவு நீர் தெளித்து, பால் பக்குவம் கெடாதபடி காய்ச்சிக் கீழே இறக்கத் தவறிடும் தாய்மார்கள், பால் பொங்கி வழியக்கண்டு பதை பதைத்து ஓடிச் சென்று, அவசரத்தினுல், இன்னது செய்வதென்று தெரியாமல், பாத்திரம் நெருப்பாகி இருக்குமே என்பதையும் மறந்து, பதட்டத்துடன் அதைப்பற்றிட, பாதிப் பால் அடுப்பிலும் பாதி அவர்கள் ஆடையிலுமாகி அவதிப்படுவார்களே-அதுபோலத்தான் ஆச்சாரியார்.

நாடே கொதித்தது, பாகிஸ்தான் கிளர்ச்சியின் போது — உலகமே உற்றுக் கவனித்தது. உயர்ந்த அறிவாளி என்ற- உன்னதமான பட்டத்தைச் சுமந்து கொண்டிருந்த உத்தமர் செய்தது என்ன? இது அடக்க முடியாத ஆர்வம்? கொழுந்துவிட்டெரியும் இனக் கிளர்ச்சி? எனவே இந்தக் கோரிக்கை வளர்ந்து வளர்ந்து, எதிர்ப்பின் காரணமாகக் கோர உருவம் பெற்று, எதிர் காலத்தில் கொலையிலும் குழப்பத்திலும் கொண்டுபோய் விடும்; ஆகவே இதனை உடனடியாகக் கவனித்து, தக்க பரிகாரம் தேடியாகவேண்டும் என்று புறப்பட்டாரோ? இல்லை! இவரும் கோடையிடிகளுடனும் பீடிப் பெருமான்களுடனும் கூடிக்கொண்டு, பாகிஸ்தானுவது மண்ணுவது, அதையாவது நாங்கள் தருவதாவது, நாடாவது பிரிப்பதாவது, பாரதமாதாவை வெட்டுவதா, பசுவை அறுப்பதா, பாலகனைத் துண்டு போடுவதா, என்றெல்லாம் தான் பேசினுர்.

பக்குவம் எப்போது ஏற்பட்டது என்கிருய், தம்பி! பரிகாரம்தேடித் தீரவேண்டும் என்ற பக்குவம் இவருக்கு எப்போது ஏற்பட்டது? பாஞ்சாலம் படுகளமாகி, சிந்து சீறி எழுந்து, எல்லைக் காந்தியே தொல்லைக்கு ஆளாகி, வங்காளம் கச்சையை வரிந்து கட்டி எழுந்து, வெளியே உள்ள வல்லரசுகள், வஞ்சகம் கக்கும் கண்களுடன், இங்கே உருவாகிக் கொண்டிருந்த களக் காட்சியைக் கவனிக்க ஆரம்பித்த பிறகுதான், இவருடைய அறிவில் ஓர் விறுவிறுப்பு ஏற்பட்டது, பேச்சிலே ஒரு பரபரப்பு காணப்பட்டது, போக்கிலே ஒரு பக்குவம் தெரியத் தலைப்பட்டது. ஆச்சாரியார் இந்தப் பக்குவம் பெறுவதற்குள், ஜின்னு, எந்த நிலைக்குச் சென்றுவிட்டார்! நீங்களாகப் பாகிஸ்தான் தருகிறீர்களா? நானாக எடுத்துக்கொள்ளட்டுமா? என்று கேட்டே விட்டார், தம்பி! பிறகுதான், ஆச்சாரியார், காரணங்களைக் காண்பிக்கவும், கதை மூலம் விளக்கவும், தத்துவம் தரவும், தூது போகவுமாகி, பாகிஸ்தான் தரப்படத்தான் வேண்டும் என்று கூறினுர். இதற்குள், நான் குறிப்பிட்ட கதையில் உள்ளதுபோல, மூன்று முறை முரசு அறைந்தாகிவிட்டது — நாலாவது ஆண்டு பிறந்தது, இனிப் பரிசு இல்லை, பரிகாரம் தருபவனுடைய தலை வெட்டி வீழ்த்தப்படும், என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

துவக்கத்திலே, பாகிஸ்தான் திட்டம் வெற்றிபெற்றே தீரும் என்பதை அறிந்து உரைத்திருந்தால், ஆச்சாரியாருடைய 'தீர்க்க தரிசனம்' துணிவு இரண்டுமே விளங்கி இருக்கும். கடைசி நேரத்தில், கட்டைக்குப் போகிற சமயத்தில் காஷாயம் தரிப்பது போல, இஸ்லாமியர்களின் இதயதாபத்தைக் கவனிக்காவிட்டால் இந்தியா ரணகளமாகும், எனவே பாகிஸ்தான் தரப்படவேண்டியதுதான் என்று பேசினுர். காலதாமதம்! இரயில் எப்போதும், குறித்தநேரத்தில் புறப்படுவதில்லை, போய்ச்சேர வேண்டிய நேரத்துக்குப் போவதுமில்லை!!

இதில்மட்டுமல்ல, அவருடைய அரசியல் வாழ்வில் இதுபோல அடுக்கடுக்காக.

---

சின்னுட்களுக்கு முன்பு தானே சொன்னுர், "இந்தி, நமது மொழிகளில் எதற்கும் ஈடாகாது" என்று. சொன்னதுடன், இந்தி வெறியர்கள் இங்கு, மக்களுடைய விருப்பத்துக்கு மாருக, இந்தியைத் திணிப்பதை யாரும் சகித்துக்கொள்ள மாட்டார்கள்; எனக்கே கோபம் கோபமாக வருகிறது", என்று கூடச் சொன்னுரே!

ஆனல், எப்போது ஏற்பட்டது இந்த 'இதோபதேசம்'-புத்தறிவு!! விருத்தநாரி பதிவிரதா!! அப்போதுதானே-ஆற்றுவார் இல்லை, தேற்றுவார் இல்லை, என்று ஆன பிறகு ஆலயப் படிக்கட்டில் அமர்ந்து "கோவிந்தா! கோபாலா!" போடும் போக்குத்தானே இது. இந்தி வெறியர்களை இன்று கண்டிக்கும் இந்தச் சக்கரவர்த்தியாரின், இந்தி வெறிக்குப் பலியாகி உயிரிழந்தவர்கள் தானே தாலமுத்துவும் நடராசனும்.

"எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்ய, நான் யாரைக் கேட்க வேண்டும்?" என்று இறுமாந்து பேசிய அதே ஏந்தலுக்குப் பார்த்தாயா' தம்பி! வந்திருக்கும் ஞானோதயத்தை-ஆனல் எவ்வளவு பரிதாபம் என்பதைக் கவனித்துப் பார், காலங்கடந்து தான் வருகிறது.

அதுபோலவே, தமிழும் தெலுங்கும், கன்னடமும் மலையாளமும் ஒரே மூலம் கொண்ட மொழிகள்— ஒரு இனத்துக்குப் பொது வானவை,என்ற திராவிடஒருமைப்

பாட்டினை நாம் வலியுறுத்திக் கொண்ட நேரத்திலே, இவர், வாய் பொத்திக்கொண்டும் இருந்தாரில்லை, வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பி, தமிழும் தெலுங்கும், மலையாளமும், கன்னடமும் மட்டும்தான் ஒன்றுக்கொன்று பந்தமும் சொந்தமும் உள்ள மொழிகளோ? வங்கம், மராடம், குஜராத் எனும் ஏனைய மொழிகளுள் மட்டும் என்ன? அவை அன்னிய மொழிகளோ? ஏன், என் மொழி! என் மொழி! என்று வெறிகொண்டு அலைகிறீர்கள்? எல்லா மொழியும் பாரத மொழிதான்! இதிலே தனித் தமிழ் என்று ஒரு கிறுக்கு! திராவிட மொழிகள் என்று ஒரு பித்தம்! செச்சே! ஏன் இப்படிப் பேதம் காட்டி நாசமாக்குகிறீர்கள்? என்று கேட்டார் இந்தப் பெரியவர்; இப்போது பேசுகிறார், "இவை நான்கும் ஒரே மூலத்தில் தோன்றிய மொழிகள்" என்று; அத்துடன் அமையவில்லை, "எனவே" போடுகிறார்! எனவே இவை ஒன்று கூடி "தட்சிண ராஜ்யம்" அமைத்துக் கொள்ளவேண்டும் என்று உபதேசம் அருளுகிறார். எதன் பொருட்டு? என்று கேட்கும்போதுதான், பாவி, பொல்லாதவன் படுக்கையைத் தட்டிப்போடு என்கிறார்; உத்தர பிரதேசம் ஓங்கி உருவெடுத்திருக்கிறது, டில்லி எல்லாவற்றையும் தின்று ஏப்பம் விடுகிறது, இந்த ஆபத்தைச் சமாளிக்க வேண்டுமானால், நாம் ஒன்றாக இருந்து, உருவத்தைப் பெரிதாக்கிக் கொள்ளவேண்டும் — அதுதான் தட்சிண ராஜ்யம் என்கிறார்.

இதே யோசனையை இவர் ஐந்தாண்டுக் காலத்துக்கு முன்பு சொல்லியிருந்தால் கூடச் சிறிதளவு செல்வாக்குக் கிடைத்திருக்கக் கூடும். நாம் திராவிடநாடு கேட்டு, மொழிவழியில் தனித்தனி அரசுகளாக, தமிழகமும், ஆந்திரமும், கேரளமும், கருநாடகமும், பிரிந்திடினும், இனவழி ஒன்றுபட்டு ஓர் கூட்டாட்சி அமைத்து, அந்தக் கூட்டாட்சி மூலம், வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடலாம் என்று நாடெங்கணும் பேசிவந்தோம்—அதேபோது இவரும், நான்கு மொழிகளும் ஒரே மூலத்தவைதான்—நான்கு பகுதிகளும் ஒரு கூட்டாட்சிக்குள் இருக்கத் தக்கவையே" என்று பேசியிருந்திருப்பாரானால், பலருடைய செவிக்கு விருந்தாகவும், சிலருடைய சிந்தனைக்கு வேலை தருவதாகவும், அமைந்திருக்கும்.

இப்போதுள்ள நிலைமையோ வேறு மட்டுமல்ல, விசித்திரமானது.

மொழி வழி அரசு என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய திட்டமாகிவிட்டது.

இந்தத் திட்டத்தை 'திராவிடம்' கேட்கும் நாமும் கேட்கிறோம், அதன் உட்பொருளை உணரமறுத்திடும் தமிழரசு கழகத்தாரும் கேட்கின்றனர். பாரத ஆட்சியிலே இன்னமும் பாசம்கொண்டிருப்பவர்களிலே சிலரும் கூடக் கேட்கிறார்கள்.

பாரதம் ஒன்றுதான் — அதைப் பிளக்கவோ, பிரிக்கவோ கூடாது என்று பேசுவோரும் பாரதத்திலே எந்தப் பகுதி எந்த மொழிக்காரரிடம் இருந்தால் என்ன என்று பேசிடக் கூசுகின்றனர்; எல்லோரும் பாரத மக்கள் என்பது இருக்கட்டும் ஒருபுறம், அதைச் சாக்காக்கி, என் நாட்டிலே சில பகுதிகளைச் செதுக்கி எடுத்து உன் நாட்டுக்குச் சுவைதேடிக் கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன், என்று முழக்கமிடுகிறார்கள்.

திராவிடநாடு திராவிடருக்குத்தான்—ஆனால் அதைச் சாக்காக்கிக்கொண்டு தேவிகுளம் பீர்மேடும் எனக்கு என்று அபகரிக்க மலையாளத் தோழர்களை அனுமதிக்க மாட்டோம்; அதேபோலத்தான் தமிழர்க்குரிய இடங்களை ஆந்திரர் கொள்ளவிடமாட்டோம், என்று நாம் கூறுகிறோம்.

இந்தச் சமயமாகப் பார்த்து, வீடு தீப்பற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்பு கேட்கும் போக்கிலே, சித்தூர் யாருக்கு? தேவிகுளம் எவருக்கு? என்று நமக்குள் சண்டை போட்டுக்கொண்டால் நல்லதா? அதோ, பார், உத்தரபிரதேசத்தை டில்லியைப்பார், எல்லோரையும் ஆட்டிப் படைப்பதை, இந்த 'உற்பாதத்தை' ஒழித்துக் கட்ட 'தட்சிணப் பிரதேசம்' தேவையே தவிர, தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று பேசுவது சரியல்ல என்று சாந்தோபதேசம் செய்கிறார்— சாணக்கியர் — தூங்கி எழுந்துவிட்டு, மாலையைக் காலை என்றெண்ணி மயங்கிடும், சாணக்கியர்.

இப்போது மூன்று திட்டங்கள், எல்லோருக்கும் புரிகிறது — ஒவ்வொரு சாராருக்கு ஒவ்வொன்று பிடிக்கிறது.

பாரதம் ஒன்றேதான்—இதிலே மொழிவழி அரசுகள் கேட்பதே தவறு—தேவையற்றது—என்றோர் கருத்து இருக்கிறது. எதேச்சாதிகாரப் போக்கினருக்கு இது இனிக்கிறது; முதலாளிகளுக்கு இது சுவைதருகிறது; பெரிய அதிகாரிகளுக்கு இது, 'பிரேம கீதம்' ஆகியிருக்கிறது!

பாரதத்துக்கு டில்லியில் ஒரு பெரிய ஆட்சி இருக்கட்டும்— ஆனால் மொழிவழி அரசுகள் நிச்சயமாக இருக்கவேண்டும்—இதிலே ஒரு மொழிக்காரரை மற்றோர் மொழிக்காரர் வஞ்சிக்க, அனுமதிப்பதோ, உடந்தையாக இருப்பதோ கூடாது, என்று மற்றோர் பிரிவினர் கொள்கைகொண்டுள்ளனர். இதை உரிமையற்ற முறையில், பிறமொழியாளரின் செல்வக் கோட்டங்களைச் சுரண்டிச் சுகபோகிகளாக உள்ள சூதுமதியினர், எதிர்க்கின்றனர்— ஏளனம்கூடச் செய்கின்றன.

நாம் மொழிவழி அரசும் வேண்டும்—அதிலே ஒரவஞ்சனையும் இருத்தலாகாது — இதை மட்டும் பெற்றால் போதாது, எல்லாவற்றையும் அடக்கி ஆதிக்கம் செலுத்தும், டில்லி ஆட்சிப்பிடியும் ஒழிந்தே ஆகவேண்டும் என்கிறோம்.

இதை ஆகுமா? என்றெண்ணும் பெருமூச்சுக்காரர்கள், ஐயயோ! என்று கூறும் அலறல்காரர்கள் ஆகியோர் எதிர்க்கின்றனர்.

ஆச்சாரியார், இந்த எதிலும் சேரவில்லை.

அவருக்கு சர்வம் டில்லிமயம் என்பதும் கசக்கிறது.

மொழிவழி அரசு என்றால் குமட்டுகிறது.

எனினும், ஒரு குடும்ப மொழிகள் என்று சொந்தம் கொண்டாடிடவும் அதன் காரணமாகவே 'தட்சிண ராஜ்யம்' என்ற அமைப்பிலே, தமிழ், தெலுங்கு, மலையாளம், கருநாடகம் எனும் தனி அரசுகளை விட்டுவிட்டு ஒன்றாகிவிடவேண்டும் என்று எண்ணவும் முடிகிறது; சொல்லவும் துணிகிறது. அப்போதுதான் டில்லி ஆதிபத்யத்தின் போக்கைச் சமாளிக்க முடியும்

என்று காரணம் காட்டவும் முன் வருகிறார்! அதேபோது வடநாட்டு ஆதிக்கத்துக்கு உட்பட்டு, உருக்குலைந்து போவானேன் தனித் திராவிடம் அமைக்கலாமே என்று அழைத்தாலோ, குமட்டுகிறது, குடலைப் புரட்டுகிறது, ஏதேதோ அச்சம் புகுந்து குடைகிறது.

பரிதாபமல்லவா, தம்பி, இந்த நிலைமை.

தெரிந்ததாம், இதுவேறு ஆசாமிபோலத்தான் இருக்கிறது! இதுநாள் வரை கண்டதற்கும் இவரிடம் காணும் சுகத்திற்கும் நிச்சயமாக மாறுபாடு இருக்கிறது —எனினும் மதுரமாகவும் இருக்கிறது. இவர், அவரல்லபோல் தோன்றுகிறதே. என்ன செய்வது? இனிச் செய்வது என்ன, நடப்பது நடக்கட்டும், நமக்கென்ன, நாம் கண்ணை மூடிக்கொள்வோம் என்று அகலிகை அம்மையார் கருதினார்களாமே, அதுபோல, இவர் வடநாடு ஆதிக்கம் செலுத்தத்தான் செய்கிறது, ஒரு நேருதான் எல்லாவற்றையும் நடத்திச்செல்கிறார், இருந்தாலும் என்னசெய்வது? கண்ணை மூடிக்கொள்ள வேண்டியதுதான்— என்று கூறுகிறார் கண்ணை மூடிக்கொண்டால் போதும் என்று கருத முடிந்தது அகலிகைக்கு. ஆச்சாரியாருக்கு, அடிமைப்பட்டுக்கிடக்கும் நிலையில் வீட்டைக்கொஞ்சம் விரிவுபடுத்தி, அழகுபடுத்தி, ஆளுக்குக் கொஞ்சம் என்று சேர்த்து. தொல்லையை அனுபவித்தால் நல்லது என்று தோன்றுகிறது. அகலிகை போக்கும் ஆச்சாரியார் போக்கும் இந்த அளவிலே மட்டும்தான் தம்பி! ஒப்பு உவமை. வீணாக நீ, கயிறு திரிக்காதே, ஆமாம், நான் அகலிகையைப் பற்றி நன்றாகப் படித்திருக்கிறேன், ஆச்சாரியாரைப் பார்த்திருக்கிறேன். இருவருக்கும் வேறோர் வகையிலேகூட உவமை இருக்கிறது.

அம்மையும் ஒரு — படுகிழத்துக்கு வாழ்க்கைப்பட்டுக் கிடந்தார்கள்.

ஆச்சாரியாரும் படுகிழமாகிப் போன கோட்பாடுகளைத்தான் கட்டிக்கொண்டு அழுகிறார்.

அன்பன்,

**அண்ணாதுரை.**


# திராவிட நாடு
# பொங்கல் மலர்

"போதுமடி இந்த வாழ்வு!"
—புலம்பினாள் ரம்பா.

"அவன் என்ன செய்தான் தெரியுமா? பாரடி, இதோ!"
—கன்னத்தைக் காட்டினாள் திலோத்தமை.

"போதும்! போதுமடி!! இந்த வேதனை..."
—என்றாள் மேனகா.

★ சொர்க்கத்தில் நரகம்

★ பாவையின் பயணம்!

—இவைகளோடு—

★ தலைவரின் தாடி

★ சந்தான சப்ரமஞ்சம்

★ குரலப்பர் மாறிவிட்டார்

★ துறவி

★ முதல் தாக்குதல்

அனைத்தும்

**சி. என். ஏ.**

அளிக்கும்

கதைகள்! கட்டுரைகள்!! கற்பனை ஓவியங்கள்!!!

அழகு மிளிரும் வகையில்!
அறிவு மணக்கும் முறையில்!!

**விலை ரூ. 1-8-0**
120 பக்கங்கள்.

குறிப்பு:— ஏஜெண்டுகள் அதிகப் பிரதிகளுக்கு இனிமேல் எழுத வேண்டாம். நிர்வாகி.


காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்